Registered as a News Paper in Sri Lanka;

பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞூ மீ ஆடி 4 ஆம் உ வெள்ளிக்கிழமை (20 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 25 ஓசை 152

## கேரதீவுப் "பாதை"க்கும் குண்டுவீசிப் பாதையில்லை!

(கேரதீவு)

குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிகொப்டரும் தாக்கியதில் கேரதீவு சங்குப்பிட்டிப்பாதை சேதமாக்கப்பட்டுள்ளது. நேற்று காலை எட்டுமணியளவில் கேரதீவு பகுதிக்கும் சங்குப்பிட்டி பகுதிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த பாதையை நான்கு சிறிலங்கா விமானப்படை பொம்மர்களும் ஒரு ஹெலிகொப்டருமாக இணைந்து தாக்கி சேதப்படுத்தின. இத் தாக்குதலின்போது பதினொரு குண்டுகள் வீசப்பட்டன. இதனால் கேரதீவு, சங்குப்பிட்டி மண்டபங்கள் சேதமடைந்தன.

இச்சமயம் கேரதீவுப் பாதை குடாநாட்டுக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

# குறிஞ்சாத்தீவில் தரை இறங்கிய சிறிலங்கா இராணுவம் புலிகள் தாக்குதலால் இழப்புடன் தடுமாறி நிற்கிறது!

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் குறிஞ்சாத்தீவுப்பகுதியில் நேற்று அதிகாலை ஐந்து ஹெலிகொப்டர்களில் பல தடவைகளாக இறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் குறிஞ்சாத்தீவிலிருந்து முன்னேறிச் செல்ல எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இழப்புக்களைச் சந்தித்த சிறிலங்கா இராணுவம் மாண்டவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் எடுத்துக் கொண்டு பெரிய உப்பு மாலுக்குப்போய்ச் சேர்ந்தது.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா ஹெலிக்கொப்டர்கள் மேலும் பல இராணுவத்தினரை ஆனையிறவு விருந்தினர் விடுதிப்பக்கம் கொண்டு வந்து இறக்கியது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை விடுதலைப் புலிகள் இரு முனைகளிலும் சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

**வீரமரணம்**

விடுதலைப்புலிகளுக்கும் ஆனையிறவு-குறிஞ்சாத் தீவுப் பகுதியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதவில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறுபேர் வீர மரணமடைந்தனர்.

அவ்வாறு வீர மரண மடைந்தவர்கள் டெஸ்மன் (மூதூர்) கீர்த்தி (கிளிநொச்சி) மேகன் (பரந்தன்) துஷ்யந்தன் (பருத்தித்துறை) குகன் (புளியம் பொக்கனை) சௌந்தன் (தரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி!

(கொழும்பு)

மகிந்த ராஜ பக்ஷ எம்.பி. (சு.க):-

வடக்குகிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு அரசாங்கமேமுழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

பியசேன கமகே எம்.பி. (சு.க):-

தென்னிலங்கையில்சிங்கள இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்படுவதும், காணாமல் போவதும் இன்னும் (4ஆம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்காவிற்கு வெளிநாடுகள் இராணுவ உதவிசெய்ய தயக்கம்!

## அரச அதிபர் மூலம் எம். பி. ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) எம். பி யான திரு. இ. பரராஜசிங்கம் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும்கடிதத்தை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மூலமாக நேற்று சபாநாயகருக்கு அனுப்பி வைத்தார். ஈழவர் ஜனநாயக முன்னணியின் (4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை

## ரஞ்சன் கொழும்பில் ஏற்கிறார் அனுரா டில்லியில் மறுக்கிறார்

(டில்லி)

சிறிலங்கா அரசின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும் ஆக எல்லாக் கட்சிகளும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அனுரா இக்கருத்தினை பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார்.

அரசாங்கக் கட்சியும், ஏனைய கட்சிகளும் சேர்ந்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நிலவிவரும் பதற்றநிலை பற்றி இந்திய அரசுக்கு விளக்

இந்தியாவிற்கு தமிழ்

## அகதிகள் வருகை இலங்கையின்

## பொது நிறுவனங்கள் மூலமே நிவாரண உதவியும் கிடைக்கும்!

(நமது அரசியல் நிருபர்)

தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு தொடுத்துள்ள யுத்தத்தில் உலக நாடுகள் மிக எச்சரிக்கையாகவே நடந்து கொண்டுவருகின்றன. சிறிலங்கா அரசாங்கம் உதவி கோரிவிடுத்த கோரிக்கைகளையும் வெளிநாடுகள் மிகக்கவனமாகப் பரிசீலனை செய்தே உதவிவருகின்றன. இதுவரை எந்த ஒரு வெளிநாடும் சிறிலங்காவுக்கு இராணுவ உதவி அளிப்பதற்கு வெளிப்படையாக முன் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க உதவி அளிக்க இம்முறை முன்வரவில்லை என்பதும் நிவாரணம் அளிப்பதற்கு சிறிலங்கா அரசு உலக நாடுக

## ஆயுதங்கள் மேலும் மீட்பு

(மாங்குளம்)

மாங்குளம் முகாம் பகுதியில் கடந்த 17 ஆம் 18 ஆம் திகதிகளில் நடந்த யுத்தத்தில் இழப்புக்களுடன் பின்வாங்கிய இராணுவத்திடமிருந்து மேலும் சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆர்.பி.ஜி. செல்-3, நேரோ-300, 203செல்-3, ஏ.கே. மகசீன்-1, 1 எம். ரவை 100, ஜே.ஆர். கைக்குண்டு-1, டொங்கா-1 ஆகியவை

## இந்தியாவிற்கு தமிழ்

# அகதிகள் வருகை இலங்கையின் உள்விவகாரமாகஎப்படி இருக்கும்

(சென்னை)

வடக்கு கிழக்கில் நாளாந்தம் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும், ஆயிரக்கணக்கானோர் நாளாந்தம் அகதிகளாக இந்தியா வருவதும் இலங்கை அரசின் உள்நாட்டு விவகாரமாக எவ்வாறு அமைய முடியும், இது தமிழ் மக்கள் மீதான புதுவித ஆக்கிரமிப்பு நடவடிக்கையே என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மீண்டும் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினையில் இந்தியா தலையிட முடியாது என்று இலங்கையின் ஜனாதிபதி ஆர். பிரேம

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை அகதிகள் 254 பேர் நாகபட்டினத்தில்

(நாகப்பட்டினம்)

திருமலையைச் சேர்ந்த 254 தமிழ் அகதிகள் தமிழக நாகப்பட்டினத்தை நேற்று சென்றடைந்துள்ளார்கள்.

கடந்த மாதம் 17ந் திகதிக்கு பின்பு தமிழ் நாடு வந்துள்ள திருமலை அகதிகளின் முதலாவது படகு இதுவென்றும்; நாகப்பட்டினம்வந்துள்ள அகதிகளின் முதலாவது படகும்இது தானென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மண்டபம் முகாமில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடிகளைத் தொடர்ந்து 469 அகதிகள் திருச்சி கொட்டப்பட்டு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் கொட்டப்பட்டு முகாமில் அகதிகள் தொகை 1962 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளும் சேர்ந்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நிலவிவரும் பதற்றநிலை பற்றி இந்திய அரசுக்கு விளக்குவதற்காக புதுடில்லி சென்றுள்ளனர்.

அப்போது வடக்குக் கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளே கொல்லப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தனர்.

ஆனால் அண்மையில் நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிடத்தக்கது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க முன்வந்துள்ள நாடுகளில் பலவும் முன்னர்போல் நேரடியாக சிறிலங்கா அரசுக்கு உதவி அளிக்க இம்முறை முன்வரவில்லை என்பதும் கவனத்துக்குரியதாகும்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு சிறிலங்கா அரசு உலக நாடுகளிடம் உதவி கோரியிருந்தது. இதற்குக்கூட வெளிநாடுகளிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்த்தபடி சாதகமான உதவி கிடைக்கவில்லை.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமும், கனடிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

சன்-1, 1 எம். ர வை 100, ஜே. ஆர். கைக்குண்டு-1, டொங்கா-1 ஆகியவை கைப்பற்றப்பட்டன.

ஏற்கனவே இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளால் அதிநவீன ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுடன் நான்கு இராணுவத்தினரின் உடல்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது. (லோ)

# பரந்தன், கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இரு இடங்களிலும் நேற்று காலையிலும், மாலையிலும் விமானக் குண்டு வீச்சு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா விமானப்படையின் புதிய இரசாயனக் குண்டு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை புதுவித குண்டு ஒன்றைத் தயாரித்து யாழ்ப்பாணத்தில் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கியிருக்கிறது. நேற்றுப் பிற்பகல் மூன்றரை மணிக்கு யாழ்ப்பாண நகருக்குமேல் வட்டமிட்ட சிறிலங்கா போர்விமானங்களிலிருந்து பீப்பா எரிகுண்டுகளும் குண்டுகளும் கோட்டைப் பகுதியிலும் மற்றும் இடங்களிலும் வீசப்பட்டன. இதேசமயம் சிறிலங்கா அரசபடைகள் புதிதாகக் கண்டுபிடித்த இவ்இரசாயனக் குண்டுகள் கோட்டைப் பகுதியில் பெருமளவில் வீசப்பட்டன. இரசாயனவாயு அடைக்கப்பட்ட பிளாஸ்டிக் கலன்கள் கோட்டைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படைப் போர் விமானங்களிலிருந்து வீசப்பட்டன. இதனால் கோட்டைப்பகுதியில் துர்நாற்றம் எடுத்துள்ளது. யாழ்; கோட்டையை கடந்த ஒரு மாதகாலத்துக்கு(4ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவந்த இராணுவம் கால்களை இழந்து திரும்பியது

(மன்னார்)

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப்புலிகளால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளில் சிக்கி கால்களை இழந்தனர்.

இதில் ஐந்துஇராணுவத்தினர் கால்களைஇழந்தனர். இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

# இன்று தமிழகம் எங்கும் பூரண ஹர்த்தால்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழக அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தமும், ஹர்த்தாலும் திட்டமிடப்பட்டபடி இன்று காலை ஆறு மணிக்கு ஆரம்பமானது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# க.பொ.த.உ.பரீட்சையைப் பிற்போட கல்வி அமைச்சிடம் வேண்டுகோள்

வடக்கு கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக அடுத்த மாதம் நடைபெற இருக்கும் க. பொ. த. உயர்தரப்பரீட்சையை பிற்போடுமாறு கல்வி அமைச்சரிடம் பரிந்துரைக்குமாறு கல்விமான்களும், பெற்றோர் பிரதிநிதிகளும் நேற்று யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டி உள்ளனர்.

தற்போதய சூழ்நிலையில் மாணவ மாணவிகள் பரீட்சைக்கு தயார்செய்யும் மனோநிலையிலோ பரீட்சை எழுதும் மனோ நிலையிலோ இல்லை என்று இவர்கள் கூறினார்கள் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் இச்சந்திப்பின் போது சமுகமளித்திருந்தார். பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களின் சம்மேளனத்தலைவர் சேதுகாவலர், அதிபர்கள் சங்கத்தலைவர் திரு. இராஜரத்தினம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா, மேலதிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டார் உதவியை நாடும் நோக்கமில்லை

**- ரஞ்சன்**

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எந்த ஒரு வெளிநாட்டின் உதவியையும் நாடும் நோக்கம் இலங்கை அரசுக்கு இல்லையென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த அமைச்சர் ரஞ்சன் வடக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் 9 சடலங்கள் எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஒன்பது சடலங்கள் சிங்கள இராணுவத்தினரால் எரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தொலைத் தொடர்பகத்துக்கு முன்னால் கடந்த பதினேழாம் திகதி சிங்கள ராணுவத்தினர் ஒன்பது சடலங்களை ரயர் போட்டுக் கொழுத்தினர். (ம)

உள்ளே

வெள்ளி மஞ்சரி

இலவச இணைப்பு

# புலிகளின் தாக்குதலால் இழப்புடன் படையினர் முகாம் திரும்பினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி முகாமிலிருந்து தும்பங்கேணி நோக்கி புறப்பட்ட அரச படையினருடன் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடுத்த கடுமையான தாக்குதலைத்தொடர்ந்து படையினர் இழப்புக்களுடன் மீண்டும் முகாமை சென்றடைந்தனர்.

நேற்றுக்காலை இடம் பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் இரண்டு படையினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 200 இளைஞர் கைது

(கல்முனை)

கல்முனையில் இருநூறு தமிழ் இளைஞர்களை ஸ்ரீலங்கா அரசபடையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்த இளைஞர்கள் குறித்து இதுவரை எவ்வித விபரமும் தெரியவில்லை என்று கூறப்படுகின்றது.

# தமிழ் மக்கள் உரிமைகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும்

**- வாசுதேவா**

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம்மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பது சம்பந்தமான பிரேரணை நேற்றுக் காலை பாராளுமன்றம் கூடிய போது விவாதத்திற்கு எடுக்கப்பட்டது.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய நவசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிடுகையில் ''தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் கவனத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரார்த்தனை

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கதிரைமாதா தேவாலய பங்கு மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரான இன அடக்கு முறை, பிறப்புரிமை மறுப்பு போன்ற மனித நேய மற்ற செயல்கள் நீங்கி, மக்கள் வாழ்வில் சமாதானம், சமவுரிமை, மனித நேயம், சகோதரத்துவம், இனப் பாகுபாடற்ற சுபீட்சம் மிளிர வேண்டும் என அருள் மிகு கதிரை மாதாவை பிரார்த்திக்கின்றனர்.

தினமும் மாலை 6 மணிக்கு கூடி 8 மணி வரை பிரார்த்தனை செய்கின்றனர். (12)

## குருக்களைக் காணவில்லை

(பருத்தித்துறை)

தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலய பிரதம குருவான சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜக் குருக்களை (கண்ணன் குருக்கள்) கடந்த ஒரு மாதமாகக் காணவில்லை என ஆலய தரும பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இந்தஆலய பிரதமகுருவான சிவ ஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஜூன் 11ஆம் திகதி வற்றாப்பளை அம்பாள் ஆலய பொங்கல் விழாவிற்கு இரண்டு நாட்கள் விடுமுறையில் சென்றவர் ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் வந்துசேரவில்லை.

இக் குருக்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் ஆலய தரும பரிபாலன சபைக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (15)

## போர்க்கால கருத்தரங்குகள்

(வடமராட்சி)

வடமராட்சியில் போர்க்கால கருத்தரங்குகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன. இக்கருத்தரங்குகளில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர், வடமராட்சி இணைப்பாளர் திரு. குணம், வடமராட்சி மக்கள்முன்னணி அமைப்பாளர் திரு. அரசண்ணா உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு வருகின்றனர். இவர்களுடன் அவ்வப் பகுதி பிரதேசப் பொறுப்பாளர்களும்வட்டஅவை பொறுப்பாளர்களும் கலந்துகொண்டு வருகின்றனர். (18)

## அதிக விலையில் சீனி

## நீதியும், நேர்மையுமே இணக்கமன்றின் இலட்சியம்

(கிளிநொச்சி)

தவறு செய்தவன் தந்தை என்று தெரிந்தும் தண்டனை வழங்கிய தனயர்கள்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களினால் நடாத்தப்படவுள்ள இணக்கமன்றுகள்கூட தவறான தீர்ப்புகளை வழங்க மாட்டாது.

கிளிநொச்சி செல்வாநகர் இணக்க மன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய விடுதலைப் புலிகளின் பாரதிபுரம்பிரதேச பொறுப்பாளர் செல்வன் பிரசாந் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி இணக்கமன்று செல்வா நகர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. செல்வன் பிரசாந் அங்கு தொடர்ந்து பேசுகையில் 'நீதிமன்றம் போன்று இது செயல்படும். நீதிமன்றுகளில் பணம் படைத்தவர்களும், செல்வாக்கு உள்ளவர்களும் வழக்கில் வெற்றியடைய வாய்ப்புண்டு. இங்கு அப்படி நடக்க மாட்டாது. பணமும், செல்வாக்கும் பாவித்து வெல்ல முடியாது, நீதியும் நேர்மையும் தான் இங்கு வெல்ல முடியும்' என்றும் கூறினார்.

## சுட்டுக் கொலை

(திருமலை)

சீனித்தம்பி கனகசாமி என்பவர் கிண்ணியாவில் வைத்து படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் 16ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்றது.

## இளைஞர் பலி

(திருமலை)

ஆலங்கேணியில் படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் சிதம்பரநாதன் என்ற இளைஞர் பலியானார்.

## தமிழர் கொலை

(திருக்கோணமலை)

இம்மாதம் 16ஆம்திகதி தம்பலகாமம் 13ஆம் கட்டையைச் சேர்ந்த பரமதி என்பவர் முஸ்லிம் ஊர்காவற் படையால் கிண்ணியாவில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டார்.

## வரிவிலக்கு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்புக்கான நிதி வழங்குவோருக்கு நூறு வீத வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அரச செய்தி அறிவித்துள்ளது.

## வழித்துணை பாதிவரைதான்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கு வழியுண்டு. ஆனால் வவுனியாவிலிருந்து றம்பைக்குளம் தேவாலயம் வரை அவர்களுடைய பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பானவர் என்ற எச்சரிக்கையுடனேயே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணிகள் அழைத்துச் செல்லப் படுகின்றனர்.

வவுனியா றம்பைக்குளம் பகுதிக்கு செல்வதற்கு மினி பஸ்சிலிருந்து இறக்கிவிடப்பட்ட இடத்தில் இருந்து மூன்று மைல்கள் கால்நடையாகவே செல்ல வேண்டும். வழியில் எந்த அபாயம் வருமிடத்தும் அதற்கு பாதுகாப்பு இல்லை எனவும் அவர்களால் எச்சரிக்கப்படுகின்றனர். றம்பைக்குளம் தேவாலயத்திலிருந்து பாதிரியாரின் துணையுடன் அனுராதபுரம் வழியாக கொழும்புக்கு பயணிகள் செல்வதாகவும் அந்த மினிபஸ் உரிமையாளர்கள் கூறியுள்ளனர். (லோ)

## கப்பலில் பருத்தித்துறைக்கு உணவனுப்ப ஆலோசனை

(திருக்கோணமலை)

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை கப்பலில் ஏற்றி வருவதற்கான அரச அதிபரின் முயற்சி அடுத்த வாரமளவில் சாத்தியமாகலாம் என்று நம்பப்படுகிறது.

கப்பலில் பொருட்களை பருத்தித்துறைக்கு அனுப்புவது பற்றி வடமாகாணத்துக்கான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கலாநிதி தேவநேசன் நேசையா தற்போது அரசாங்க அதிபருடன் ஆலோசனை நடத்தி வருவதாக தெரிகிறது.

முல்லைத்தீவுக்கும் மன்னாருக்கும் கப்பல்களில் உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அரசு இணங்கி உள்ளது என்றும் தெரியவருகிறது. (75)

# இராணுவத்தின் மிதிவெடிக்கு கால்நடைகளும் பாதிப்பு

(கிளிநொச்சி)

மனிதர்கள் மட்டுமல்ல மாடுகளும்கூட இராணுவத்தினரின் மிதிவெடிகளினால் கால்களை இழந்து வருகின்றன.

கொக்காவிலில் இராணுவ முகாம் தாக்கப்பட்டதை அடுத்து அம்முகாமுக்குள் துணிவுடன் சென்ற மாடு ஒன்றும் மிதி வெடியில் சிக்கி மரணமாகியது.

கொக்காவிலில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த வேளையில் ஆடு, மாடு எதுவுமே அப்பக்கம் தலைவைத்துப் பார்ப்பதுமில்லையாம். தவறி அப்பக்கம் தலையை நீட்டும் ஆடு மாடுகள் தப்பி வருவது கிடையாதாம்.

மேற்படி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மேற்படி கால்நடைகளைச் சுட்டுத் தமக்கு உணவாக்கிக் கொள்வார்களாம்.

இதனால் புத்துவெட்டுவான் பகுதி மக்கள் தமது கால்நடைகளை எக்காரணம் கொண்டும் கொக்காவில் பக்கம் மேய்ச்சலுக்கு விடுவதில்லையாம்.

புத்துவெட்டிவான் மக்கள் பீதியினால் தமது கிராமத்தை விட்டு வெளியேறியதனாலும், கொக்காவிலில் இராணுவ முகாம் தரைமட்டமாக்கப் பட்டதாலும் கால்நடைகள் நீர், உணவு ஆகியவற்றைத் தேடி மேற்படி முகாம் பக்கமாகச் செல்லும்போது மிதி வெடிகளில் சிக்கிக் கால்களை இழந்து வருகின்றன. (49)

## பொது அமைப்புக்கள் உதவி

(தெல்லிப்பளை)

திருமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாகி இடம் பெயர்ந்தவர்களுக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் யூனிவேர்சல் சமூக சேவைப்பிரிவின் தேனீக்கள் அமைத்துள்ள அகதி முகாமிற்கும் பல பொது அமைப்புக்கள் மனித நேய அடிப்படையில் உதவிகளை வழங்கியுள்ளன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர், இலங்கை வங்கி சுன்னாகம் கிளை ஊழியர்கள், குரும்பசிட்டி சன்மார்க்கசபையினர் ஆகியோர் உடைகள், உலர் உணவுப் பொருட்கள் போன்றனவற்றை உதவியுள்ளனர். (26)

## கல்லூரிக்கு வர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையணியைச் சேர்ந்த மாணவர் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு கல்லூரிக்குத் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## சமாதானம் நிலவ வேண்டி பிரார்த்தனை

(மானிப்பாய்)

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கெதிராக நீதி கோரியும் அமைதி சமாதானம் நிலவ வேண்டுமென்று கோரியும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலில் விசேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெறும்.

அன்று தேவர்கள் தங்களை அழிக்கும் அசுரர்களிடமிருந்து காப்பாற்றுமாறு முருகனிடம் வேண்டி நின்றனர். அது போல் தமிழரையும் தமிழ் இனத்தையும் அழிக்கின்ற கொடிய விமானத் தாக்குதல்களிலிருந்து பசி பட்டினிச் சாவுகளில் இருந்தும் நோய் நொடிகளிலிருந்தும் தம்மைக் காப்பாற்றுமாறு இக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

## மகோற்சவம்

(புங்குடுதீவு)

## இந்துமாணவரின் சேவை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள யூனிவேர்சல் சமூகசேவைப் பிரிவான 'தேனீக்கள்' பராமரிக்கும் இடம் பெயர்ந்தோருக்கான முகாமிற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் சென்று பதுங்கு குழிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர். யாழ். இந்து மாணவர்கள் இவ்வாறு பல

## மதுரையில் 40 குண்டுகள்

(மதுரை)

மதுரையில் வீடொன்றில் வைத்து நாற்பது வெடிகுண்டுகள் உட்பட வெடிகுண்டுகளை தயாரிக்கும் தளபாட சாமான்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவைகளோடு சம்பந்தப்பட்ட ஒரு நபரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## வேண்டுகோள்

நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட வாகன உரிமையாளர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமைகாலை 10 மணியளவில் திவ்விய ஜீவன சங்க (சட்டநாதர் கோவில்) மண்டபத்திற்கு சமுகம் தரும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர்பிரதேச பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## உப அலுவலகம் இடம் மாற்றம்

(கொழும்புத்துறை)

காங்கேசன்துறை பிரதேச சபை உப அலுவலகம் மல்லாகம் கிராமசபை அலுவலகத்திற்குத் தற்காலிகமாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, (24)

## தேங்காய் விலை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தின் அநேக பகுதிகளில் தேங்காயின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

அண்மைக் காலங்களில் இரண்டு, மூன்றுரூபாவரை விற்கப்பட்டு வந்த தேங்காய்கள் தற்போது ஐந்து, ஆறு ரூபாவரை தனியார் கடைகளிலும் சந்தைகளிலும் விற்பனை செய்யப் பட்டுவருகின்றது. (24)

## அகதிகளுக்கான தகவல் மையம்

யாழ். இந்து சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் நல்லூர் முத்திரைச்சந்தையடியில் அகதிகளுக்கான தகவல் மையம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வரும் அகதிகள் தமது உறவினர்களையோ அல்லது நண்பர்களையோ தவறவிட்டிருப்பின் காணாமற் போனவர் பற்றிய விபரங்களை மேற்படி மையத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படையினர் முத்திரைச் சந்திக்கு பிறமாவட்டங்களிலிருந்து வரும்அகதிகளுக்கான வழிகாட்டல், முதலுதவி சேவைகளிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணம் மறுப்பு

(கொழும்புத்துறை)

வெளி மாவட்டங்களில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து தமது உறவினர், தெரிந்தவர் இல்லங்களில் தங்கி இருக்கும் குடும்பத்தினர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு பெயர் விபரம் பதிவு செய்ய முடியாது என அநேக கிராம சேவகர்கள் மறுப்புத் தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இவ்விதம் தங்கியிருந்த குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு மட்டுமே அகதிகள் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## இராணுவத்தால் பலி

(கிளிநொச்சி)

மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்றவர் மரணமானார். கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த கா. வடிவேல் என்ற 3 பிள்ளைகளின் தந்தையேஇவ்வாறுஇராணுவத்தினராலும், காடையர்களாலும் கொல்லப்பட்டவராவார்.

கிளிநொச்சி போக்கு வரத்துச்சபை ஊழியரான இவர் கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்ற ஒரு மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தார். அந்தப் பயணத்தின் போதே அவர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். (49)

## சீனி

(பண்டத்தரிப்பு)

லொறிகளில் உணவுப் பொருட்கள் வருவதாக வெளியான செய்திகளையடுத்து சில இடங்களில் பதுக்கிவைத்த சீனி கிலோ அறுபது ரூபா, அறுபத்தைந்து ரூபாவாக விற்கப் படுகிறது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (12)

## அலுவலகங்கள் இடம்மாற்றம்

(தெல்லிப்பழை)

அண்மைக்கால நிலமைகளின் காரணமாக பல அரச அலுவலகங்களும் இயங்க முடியாத நிலையில் பாதுகாப்புக் காரணமாக வேறிடங்களுக்கு தற்காலிகமாக இடம்மாற்றப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை பிரதேசசபை அலுவலகம் மல்லாகம் பிரதேச சபை உப அலுவலகத்திலும், தெல்லிப்பழை தபாற்கந்தோர் துர்க்காபுரத்திலும் தற்காலிகமாக இயங்கி வருகின்றன. (26)

கான அத்தியாவசிய சேவை ...

## பாதிக்கப்பட்ட வங்கி ஊழியர்களுக்கு உதவிகள்

(தெல்லிப்பளை)

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அண்மைக்கால நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட சகல இலங்கை வங்கி ஊழியர்களுக்கும் ஐயாயிரம் ரூபாய் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

அத்துடன் அதிகரித்துச் செல்கின்ற உணவுப் பொருட்களின் விலையுயர்வுகள் போன்றவற்றைச் சமாளிக்க ஊழியர்களுக்கு மூன்றுமாத கால மொத்தச் சம்பளத்தை ஆறு வீத வட்டியில் மூன்று வருடங்களில் மீளச்செலுத்தத் தக்க வகையில் அல்லது ஒரு மாத கால மொத்தச் சம்பளத்தை வட்டியில்லா கடனாகவும் வழங்கவுள்ளனர்.

இத்துரித நடவடிக்கைகள் இலங்கை வங்கி வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் திரு. பி. ஜே. வின்சனின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. (26)

## படையினருக்கு புதிய வார்ட்டு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதலில் காயமடைந்து வரும் அரச படையினருக்கு அனுராதபுரத்தில் சகல வசதிகளும் பொருந்திய வார்ட் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இருபது லட்சம் ரூபா செலவிலான இந்த வார்ட்டுக்கு அமெரிக்க அரசினால் பதினேழு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் இருபத்தெட்டாம் திகதிசனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திரு விழாவும், ஆறாம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திரு விழாவும் நடைபெற்று ஏழாம் திகதி செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திரு விழாவுடன் மகோற்சவம் நிறைவு பெறும். (22)

## பாடசாலைகளில் அகதிகள்

(திருமலை)

தம்பலகாமம் மகாவித்தியாலயம், ஆலங்குளம் மகாவித்தியாலயம் இரண்டிலும் தமிழ் மக்கள் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மாணவர்கள் இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று பதுங்கு குழிகளை அமைத்துக் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊழியருக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கானகூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை (23 . 7 . 90) காலை 9.00 மணிக்கு கந்தர் மடத்தில் உள்ள மாவட்ட முகாமையாளர் இல்லத்தில் நடைபெறும் என மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி. எம். விஜயகுமார் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் யூன், யூலை மாத சம்பள முற்பணம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மற்றும் காரியாலய நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (24)

றது. (49)


### தொழுநோய் சிகிச்சை நிலையம்

மானிப்பாய் வைத்தியசாலையில் ஒவ்வொரு புதன்கிழமையிலும் காலை 8 மணி முதல் தொழுநோய் சிகிச்சை நடைபெறும். இப்பகுதி தொழுநோயாளர்கள் தமதுசிகிச்சையை இங்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B /1273)

வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள்
தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

DHL WORLDWIDE EXPRESS

**D. H. L. International Ltd.,**
C/o. Cosmos Marketing Services
337, Kasthuryar Road, JAFFNA.

(B.965)

### அறிவித்தல்

#### குருத்துவ திருநிலைப்படுத்தல்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த
- கொலின் சாள்ஸ்
- ஸ்ரனிஸ்லோஸ் நெவில் கிரிஸ்ரஸ் ஞானராஜா

ஆகிய இருவரும் இம்மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் குருக்களாக திருநிலைப் படுத்தப்படுவர்.

யாழ். மறைவட்டத்தைச் சேர்ந்த சகல குருக்கள் துறவிகள் அனைவரையும் இத்திருச்சடங்கில் பங்கெடுக்க அன்புடன் அழைக்கின்றோம்.

அருட் திரு J. P. E. செல்வராஜா
யாழ். ஆயரின் செயலர்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

(R/ 530)

### மருந்துக்கடை இடம்மாற்றம்

இப்போதைய சூழ்நிலையில்
பாதுகாப்புக் கருதி
**எமது ஸ்தாபனம்**
கீழ்க்காணும் முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது.

எங்களிடம்
அபிஷேகச் சாமான்கள் ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள் வாசனைத் திரவியங்கள்
சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய விலாசம்

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)

(B/1201)

கண்டுக்குளி சிறு நூலகம்



# போராட்டத்திற்கு உதவ ஏன் இந்தத் தயக்கம்?

ஆசிரியர்,
ஈழநாதம்.

சிங்கள பௌத்த பேரினவாத அரசு தமிழீழ மக்களுக்கு எதிரான யுத்தம் பிரகடனப் படுத்தி ஒரு மாத காலத்திற்கு மேலாகிவிட்டது. இந்த ஒரு மாதகாலத்தில் தமது சொந்த மண்ணிலேயே பல லட்சம் மக்கள் ஊன் இழந்து, உடை இழந்து, உறையுள் இழந்து அகதிகள் எனும் பெயருடன் அல்லல் படுவதைக் காண்கிறோம். இந்த நிலை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. 1958 ஆம் ஆண்டு ஆரம்பித்த அகதி நிலை இன்று 1990 ஆம் ஆண்டிலும் மாறவில்லை. இந் நிலை மாற வேண்டுமானால் நாம் தமிழீழ சுதந்திர தாயகத்தைப் பெறவேண்டும். இதில் நாம் வெற்றியடைய இப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக உருவாக்கி எமது முழு அளவிலான பங்களிப்பை புலிகளுக்கு வழங்க வேண்டும்.

சிறிலங்கா அரசு தனது படைப் பலத்தை பெருக்க மேலும் ஐம்பதினாயிரம் இளைஞர்களைச் சேர்த்துள்ளது. இதற்கு சிங்கள இளைஞர்கள் முண்டியடித்து தம்மை இதில் ஈடுபடுத்திக் கொண்டனர். வயிற்றுப்பாட்டிற்காகவே பெரும்பாலானோர் இப் படையில் சேர்கின்றனர் என்று எமது தமிழ் இளைஞர்கள் தமக்கு சமாதானம் கூறுகின்ற போதிலும், தமிழரை அழிக்கும் இனத் துவேசத்துடனும் சிங்கள இளைஞர்கள் இப் படையில் சேர்கிறார்கள் என்பது எம்மவர்க்கு தெரியாமலில்லை. கிழக்கு மாகாணத்திலே எத்தனையோ தமிழ் இளைஞர்கள் குண்டர்களால் வெட்டிக் கொலை செய்யப் பட்டுள்ளனர். இப்படி எல்லாம் நடந்தும், தமிழீழத்தை மீட்கும் இறுதிப் போர் நடைபெறும் இக்கால கட்டத்தில் புலிகளுடன் தமது தோளையும் கொடுத்து நமது படைப் பலத்தைப் பெருக்க நினைக்காதது மிகவும் வேதனைக் குரியவிடயமாகும்.

## புதினம் பார்க்கும் இளைஞர்கள்

வானத்தில் ஹெலி வருகிறதா என்று அண்ணாந்து பார்த்து சைக்கிள் ஓடிய நம் இளைஞர்கள் இப்போதெல்லாம் பின்பக்கம் திரும்பிப் பார்த்துப் பார்த்து சைக்கிள் ஓடுகி ார்கள். இப்படி இன்று சில இளைஞர்களைக் கண்டேன். ஏன் இவர்கள் இப்படி ஓடுகிறார்கள்? என்று ஒரு வயோதிபரைக் கேட்டபோது

இது இப்படி இருக்க நமது தாய்க்குலம், பங்கர் வெட்ட, சிலிப்பர் கட்டை கழற்ற கூப்பிடுகிறார்களாம் என்று கூறி தமது மைந்தரை வீட்டிலே பதுக்கி வைப்பது அவர்களது அறிவீனத்தைகாட்டுவதுடன், பெரும் வேதனைக்குரியதாகவும் உள்ளது. தன் மகனைப் போன்றே எத்தனையோ தாய்மார் பெற்ற மைந்தர்கள் இன்று கடற்புலிகளாய், கரும்புலிகளாய் தம் உயிரைத் துச்சமென மதித்து நம் ஈழத்தை மீட்கப் புறப்பட்டு விட்டதை இந்தத்தாய்க்குலம் காணாததை இட்டு மனம் வருந்த வேண்டியுள்ளது. அதே நேரத்தில் வீரத்திலகமிட்டு களத்திற்கு தமது மைந்தரை அனுப்பும் தாய்மாரும், நமது ஈழத்தில் தான் உள்ளார்கள் என்பதையும் எடுத்துக்காட்டி மனமகிழ்ச்சி அடையாமல் இல்லை.

## மக்கள் மடல்

சிறிலங்கா அரசு பொய்ப் பிரசாரங்களைச் செய்வதன் மூலம் உலக நாடுகளில் அனுதாபத்தைப் பெற முயன்று ஒரு கையால் அந்நாடுகளில் பிச்சை வாங்கிக் கொண்டு மறுகையால் தேசிய பாதுகாப்பு நிதி என்று சிங்கள மக்களிடம் இருந்து பணம் சேர்ப்பதன் மூலம் சிங்கள மக்களை தமிழருக்கு எதிராக தூண்டி விடுகிறது. இதன் மூலம் எத்தனையோ கோடி பணம் சேர்த்து தமிழ் மக்களை அழிக்க முயலுகிறது. தென் மாகாணத்திலே எத்தனையோ பொது நிறுவனங்கள் முன்நின்று பணம்சேர்த்து சிறிலங்கா அரசிற்கு உறுதுணையாக உள்ளது. ஆனால் மக்களுக்கு முன்னோடியாக இருக்க வேண்டிய நமது ஈழத்திலே உள்ள எத்தனையோ நிறுவனங்கள் பேசாமடந்தையாக உள்ளதை இட்டு மிகவும் மனம்வருந்தவேண்டியுள்ளது.

தற்போது ஈழத்திலே மண் மீட்பு நிதிகோரி கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலமாகக் கூட நீங்கள் உங்கள் பங்களிப்பை கொடுக்கலாமே ''இவையளால் வான் தாக்குதலைச் சமாளிக்க இயலாது'' என்று விமர்சிப்பதை விட்டு அதை சமாளிப்பதற்கு உங்களால் இயன்ற அளவு பணம் கொடுத்து உதவுவதன் மூலம் எமது வீரர்களுக்கு உறுதுணையாக நிற்கலாமே.

விடுதலை வேங்கைகள் மட்டும் போராடினால் எமது

# இது விடுதலைப் போர்




இலங்கைத் தீவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இனவாத சிங்கள அரசுகளின் தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கு உள்ளாகிய தமிழீழம், அவர்களின் ஆதிக்கத்திலிருந்து நிரந்தர விடுதலை பெற, கடந்த 18 வருட காலமாக ஆயுதம் தாங்கிப் போராடி வருகின்றது.

அமைதி வழியில் தமிழ் பேசும் மக்கள் நிகழ்த்திய சாத்வீகப் போராட்டங்கள், ஆயுத முனையில் அடக்கப்பட்ட போது தான், தமிழீழ விடுதலைக்கான இந்தஆயுதப் போராட்டம் தோற்றம் கண்டது.

இன்றுஎமதுவிடுதலைப் போராட்டம்பல திருப்புமுனைகளைச் சந்தித்து, பல தடைகளைத் தாண்டி, ஒரு பரிணாம வளர்ச்சி கண்டு, தனது இறுதி வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இன்றைய இச் சூழ் நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், அதனை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், அவர்களுக்குப் பின்னால் மலையாகத் திரண்டு நிற்கும் தமிழீழ மக்களையும் அழித்து, ஒழித்து விட சிங்கள மக்களின் பலமான ஒத்துழைப்புடனும், எதிர்க் கட்சிகளின் பூரண ஆதரவுடனும் பிரேமதாசா அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது.

இந்த மண்ணின் மீதும், இங்கு வாழ்கின்ற மக்களின் மீதும் ஒரு முழு அளவிலான போர் பிரகடனப் படுத்தப்பட்டு, வான், தரை, கடற் படைகளைக் கொண்டு தாக்குதல்களை பிரேமதாசாஅரசு நடாத்தி வருகின்றது.

இங்கு மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற சிங்கள அரசுகள் எல்லாமுமே, தமிழ் பேசும் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையைக் கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கின்றன. இந்த வரலாற்றுத் தொடருக்கு இன்று உள்ள பிரேமதாசா அரசோ, அல்லது இனிவரும் இன்னொரு சிங்கள அரசோ விதி விலக்கானவை அல்ல.

1958 ... 77...83...87...90... எனதமிழ் பேசும் மக்கள்மீது

தமிழீழம் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது.

தமிழீழத்தின் தென் பகுதி சிதைக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது.

கிராமம், கிராமமாகத் தமிழர்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்படுகின்றார்கள .....

வானத்திலிருந்து குண்டு வீசியும், ஏவுகுண்டுத் தாக்குதல் நடாத்தியும், கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் நடாத்தியும் தமிழர்கள் கொல்லப்படுகின்றார்கள்......

## சுப்பு

ஏராளமான தமிழர்கள் கைது செய்யப் பட்டுகொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்......

தமிழ்பெண்கள் மிருகத்தனமான முறையில், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்......

இலட்சக்கணக்கான தமிழ் மக்கள், வாழ்ந்த நிலத்தை விட்டு,வீட்டை விட்டு அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்......

தமிழீழத்தில் இன வெறி தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது.

இந்த இன அழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் வான், தரை, கடற்படைகளை, எதிர்த்து — சிங்கள அரசு தமிழ் பேசும் மக்கள் மீது திணித்துள்ள மிகப் பெரிய போரை எதிர்த்து எமது போராளிகள் பல முனைகளிலும் இன்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

போர்

இன்றைய உலகில் பல நோக்கங்களுக்காக, பல தரப்பினராலும் இது நடாத்தப் படுகின்றது. இன்னொரு நாட்டை ஆக்கிரமிப்பதற்காக... எல்லைகளை விரிவு படுத்துவதற்காக... வளங்

னால் இன்று நடாத்தப்படுகின்றன. இன்று இங்கே சிங்கள அரசு நடாத்திக்கொண்டிருக்கும் போர் இந்த வகைகளைச் சேர்ந்ததல்ல. அது தமிழ் இனத்தை பூண்டோடு அழித்து விடுவதற்கான ஒரு போராகும்.

ஆனால்;

நாம் நடாத்திக்கொண்டிருக்கும் போர் - நமது எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான ஒரு போர் அல்ல; பறிபோன நமது எல்லையை மீட்பதற்கான போர். இன்னொரு நாட்டை ஆக்கிரமிப்பதற்கான ஒரு போர் அல்ல; ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது தேசத்தை விடுவிப்பதற்கான போர். இன்னொரு இனத்தை அழித்து, ஒழித்து விடுவதற்கான ஒரு போர் அல்ல; சிங்கள அரசின் இன அழிப்பு

> **தமிழீழம்.**
>
> **இது எங்களுடைய மண்.**
>
> **நாங்கள் பிறந்து... வளர்ந்து... வாழ்கின்ற மண்.**
> **வழிவழியாக எங்கள் இனத்தவர் வாழ்ந்த மண்.**
> **ஆக்கிரமிக்க வந்தவர்களை, தலை நிமிர்ந்து எதிர்த்த மண்.**
>
> **எமது 1,500 போராளிகளினதும் 30,000 மக்களினதும் உதிரத்தால் உரமேறிய மண்.**
> **புதிய சரித்திரத்தைப் படைக்கத் துடித்து நிற்கும் மண்.**

## மொத்தத்தில் இது விடுதலைப் போர்

இன்று இந்தப்போர் வடக்கே பருத்தித்துறையில் இருந்து தெற்கே குமண வரையும், மேற்கே தலைமன்னாரிலிருந்து கிழக்கே கொக்கிளாய் வரையும் பரந்து நிற்கின்றது. எமது போராளிகளின் விலை மதிக்க முடியாத தியாகத்திற்கு முன்னால், அளப்பரிய அர்ப்பணிப்புக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாத சிங்களப்படைகள் நிலைகுலைந்து தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இன்று, தமிழீழம்சிங்களஅரசின் கட்டுபாட்டின்கீழ்இல்லை

இப்போது;

தமிழ் பேசும் மக்கள் அனைவருமே, இந்த மண்ணில் நடக்கின்ற விடுதலைப் போராட்டத்தில் தமது நேரடியான பங்களிப்பை வழங்கி, அப்போராட்டத்தில் தம்மை முழுமையாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று, ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையை... இந்த நெருக்கடியான கால கட்டத்தை... தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தமண் - இந்த நாடு -

இங்கு வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் பாரம்பரிய நிலம் - இந்த நிலம் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் சொந்தமா

தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு, இந்த மண்ணைக் காப்பாற்ற வேண்டிய கடமையும், இங்கு நடக்கின்ற போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய வரலாற்று நியதியும் உண்டு.

நெடிய பனையும்...
பரந்த வயல் வெளிகளும்...
அடர்ந்த காடுகளும்...
சூழ்ந்து நிற்கும் கடலும்....

எந்த வகையில் எங்களுக்குச் சொந்தமாகுமோ, அந்த வகையில் இங்கு நடக்கின்ற விடுதலைப் போராட்டமும் எமக்குச் சொந்தம்.

இந்த மண்ணில் வாழ நாம் எந்தவகையில் உரிமையுடையவர்களோ, அந்த வகையில் இந்த மண்ணில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய உரிமையும் எமக்கு உண்டு.

ஒவ்வொரு விடுதலைப் போராளியும் எந்த வகையில் மக்களின் குழந்தைகளாவார்களோ, அந்த வகையில் இந்தப் போராட்டத்தை வளர்த்து, எமது இறுதி இலட்சியத்தை வென்றடைய அவர்களுக்குத் தோள் கொடுக்க வேண்டிய கடமையும் மக்களுக்கு உண்டு.

இந்தப் போர் வெற்றி பெற முழு மக்களும் கட்டாயம் பங்களித்தே ஆக வேண்டும். எமது விடுதலையை நோக்கமாகக் கொண்ட இத்தேசிய விடுதலைப்போருக்கு இந்த மண்ணில் வாழுகின்ற

ஓடுகிறார்கள்? என்று ஒரு வயோதிபரைக் கேட்டபோது அவர் தூரத்தில் நின்ற எல்ப் வண்டியை காட்டினார். அங்கு சில வீரவேங்கைகள் நிற்பதை கண்டேன். அவர்கள் பங்கர் வெட்ட கூப்பிடுகிறார்கள் என்று இவர்கள் ஓடுகிறார்களாம். ஆகா! நமது ஈழத்தை மீட்க எம்மவர்க்கு எவ்வளவு ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்று பார்க்கும் போது மிகவும் மனவருத்தமாக இருந்தது. சந்திகளில் சேர்ந்து நின்று அரட்டை அடிப்பதையும், வீடுகளில்குழுமிகும் மாளம அடிப்பதையும். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு புதினம் பார்க்கச் செல்வதையும் நம் இளைஞர்கள் தவிர்த்து, களத்தில் இறங்கி நம் ஈழத்தை மீட்கப் புறப்படலாமே.

உறுதுணையாக நிற்கலாமே.

விடுதலை வேங்கைகள் மட்டும் போராடினால் எமது சுதந்திர தாயகத்தை மீட்க முடியாது. மக்களாகிய நாமும் இதில் கலந்து கொள்வது அவசியமாகும். எமது ஈழத்தில் நெருங்கிய தொடர்புடைய ஸ்தாபனங்கள் எத்தனையோ உள்ளபோதிலும், இவை மக்கள் மூலம் சிங்கள அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பி உலக நாடுகளுக்கு இதை தெரியப்படுத்துவதற்கு முன் வராததை இட்டு மனம் வருந்துகிறோம். இதிலிருந்து மக்கள் இன்னும் விழிப்பாக இல்லை என்பதே புலனாகிறது.

மாணவி
மிதிலா

1958 ... 77...83...87...90... எனதமிழ் பேசும் மக்கள்மீது நிகழ்த்தப் படுகின்ற இனப் படுகொலையின் வரலாறு தொடர்கிறது.

காக... எல்லைகளை விரிவு படுத்துவதற்காக... வளங்களை அபகரிப்பதற்காக என்று பலதரப்பட்ட போர்கள், பல நாட்டு அரசுகளி

கான ஒரு போர் அல்ல; சிங்கள அரசின் இன அழிப்பு நடவடிக்கையிலிருந்து எமது இனத்தை காப்பதற்கான போர்.

தும் பாரம்பரிய நிலம் - இந்த நிலம் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் சொந்தமானது. இந்த நிலத்திற்கு தமிழ் பேசுகின்ற மக்கள் அனைவரும் உரிமை உடையவர்கள்.

மாகக் கொண்ட இத்தேசிய விடுதலைப்போருக்கு இந்த மண்ணில் வாழுகின்ற அனைத்து மக்களும் தமது முழுமையான பங்களிப்பைச் செலுத்தவேண்டும். □

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக

# இந்திய-பாகிஸ்தான் உயர்மட்ட அதிகாரிகள் இஸ்லாமபாத்தில் பேச்சு

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் பிரச்சினைக்கு பொதுத் தீர்வு ஒன்றினைக் காண்பதற்காக இந்தியாவுக்கும் பாகிஸ்தானும் இடையில் பேச்சு வார்த்தை இஸ்லாமாபாத்தில் நடைபெறுகின்றது.

கடந்த ஆறு மாதங்களாக இந்தப் பிரச்சினை குறித்து இரு நாடுகளும் காரசாரமான கண்டனத்தை ஒன்றுக்கொன்று தெரிவித்து வந்தன.

இதன் பின்னர் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் வாஷிங்டனில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டன. அதுவும் வெற்றியளிக்காத நிலையில் காஷ்மீரில் தொடர்ந்து பதற்றம் நிலவி வந்தது.

இதன் இரண்டாவது கட்டமாக இரு நாடுகளின் உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகள் வெளியுறவு அமைச்சின் செயலாளர் மட்டத்தில் நடைபெறுகின்றது.

இருதரப்பிலும் விட்டுக்கொடுக்காத தன்மை காணப்படுகின்றதாக இஸ்லாமாபாத் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன, ஆனால் இருதரப்பிலும் செய்தி வெளியிட்ட அதிகாரிகள் பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் காணப்படுகின்ற அதே வேளை இழுபறி நிலையும் காணப்படுவதாக தெரிவித்தார்கள்.

இந்தியா தரப்பில் காஷ்மீர் நிலை குறித்து முஸ்லிம் தீவிரவாதிகள் குறித்தே பிரச்சனை எழுவதாக கூறப்படுகிறது, பாகிஸ்தான் தரப்பில் வெகுஜன வாக்கெடுப்பு காஷ்மீரில் நடத்தப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

## இந்தியா வெற்றி

(லண்டன்)

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஆறு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது,

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 54 ஓவர்களில் தனது சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதில் அலன் லாம்ப் 56, டேவிட்கவர் 50, அணித் தலைவர் கிராம்கூட்ச் 45 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதற்குப் பதிலளித்து ஆடிய இந்திய அணி 53 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப் பெற்றது இதில் சஞ்சய் மன்ஜரேக்கர் சிறப்பாக 82 ஓட்டங்களையும் அசாருதீன் ஆட்டம் இழக்காது 55 ஓட்டங்களையும் பெற்றனர். இவ்வாட்டத்தின் சிறப்பாட்டக்காரராக இந்திய சுழல் பந்து வீச்சாளர் அனில் சாம்லே தெரிவு செய்யப்பட்டார். அடுத்த ஆட்டம் இன்று நடைபெறும்.

## படகு திருப்பப்பட்டது

(புங்குடுதீவு)

கடந்த வியாழன் (நேற்று) நெடுந்தீவிலிருந்து பிரயாணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கி வந்த தனியார் படகொன்று நயினாதீவில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படையினரால் திருப்பி நெடுந்தீவுக்கே அனுப்பப்பட்டது.

நெடுந்தீவிலிருந்து எவரையும் வெளியேற விடாமல் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. (22)

# குளக்கட்டு உடைப்பால் கிளிநொச்சியில் வெள்ளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் குளக்கட்டு உடைத்து விடப்பட்டதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குளத்துக்கு அண்மையிலுள்ள பல குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

இரணைமடுக்குளத்து நீர் கிளிநொச்சி இராணுவ முகாமுக்குப் பின்னால் உள்ள கிளிநொச்சிக் குளத்துக்கு விடப்பட்டு 4 ஆம் வாய்க்காலில் இருந்து 10ஆம் வாய்க்கால் வரை உள்ள வயல்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சிக் குளக்கட்டு உடைத்து நீர்ப்பாசனம் செய்யப்படுவதால் ''ஹை ஆறு'' ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள 400 ஏக்கர் நிலத்திற்கும்நீர்ப்பாய்ச்ச முடியாது நெல் வயல் அழிந்து விடக்கூடும் என விவசாயிகள் கவலைப்படுகின்றனர்.

கிளிநொச்சிக் குளத்து நீரை அளவாக வெளியேற்றும் துருசை திறந்து நீரை அளவாக வெளியேற்ற இராணுவம் அனுமதியளிக்க மறுத்ததாலேயே குளக்கட்டு உடைக்கப்பட்டு வயல்களுக்கு நீர் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (49)

## பதுங்கு குழிக்காக பனை அழிப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் பதுங்கு குழியமைக்கும் வேலையில் இளைஞர்கள், முதியவர்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி பலரும் கூட்டாக இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் பல இடங்களில் அத்துமீறி பனைமரங்களை தறிக்கும் வேலையிலும் பலரும்ஈடுபட்டுவருகின்றனர். இதனால் பல இடங்களிலும் பனைமரம் தறிக்கும் சண்டைகளும் நிகழ்ந்து வருகின்றன.

இதேவேளை பொது இடங்களிலுள்ள பனை மரங்களைத் தறித்து எமது மண்ணின் வளங்களை அழிக்க வேண்டாமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

## அகதிகளுக்கு மாணவர் உதவி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் ட்லாலியை அண்டியுள்ள பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சக்கோட்டை தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு உணவுப் பொருட்களைச் சேகரித்து வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இம்மாணவர்கள் தெரிவித்தனர். (15)

# மின்சாரக் கம்பித் திருட்டே மின்சாரத் தடைக்குக் காரணம்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி மின்சாரத் தடைக்கு காரைநகர் பகுதியில் இடம்பெறும் மின்சாரக் கம்பிகள் திருட்டே காரணமென கூறப்படுகிறது.

கடந்த ஒருமாத காலமாக தீவுப்பகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்ட நிலையில் உள்ளது. இதனால் தீவக மக்கள் மிகுந்த கஷ்டங்களை அடைகின்றனர். தீவுப் பகுதிக்கு மின்காவிச் செல்லும் மின்கம்பங்கள் செப்புக்கம்பியிலானவை. மின்சாரமில்லாத வேளைகளில் திருடர்கள் இவற்றை களவாக வெட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றார்கள் என கூறப்படுகிறது.

திருடப்படும் மின்கம்பிக்கு பதிலாக வேறு கம்பிகள் பொருத்தப்பட்டாலும் அவைகளும் வெட்டப்பட்டு விடுவதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அருகில் மின்கம்பிகள் அறுந்தாலோ அல்லது ஏதும் பிழை ஏற்பட்டாலோ அவற்றையும் உடனடியாக திருத்தம் செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுவே தீவுப்பகுதி மின்தடைக்கு காரணமென கூறப்படுகிறது. (15)

# மேற்பார்வையாளர்களாக கடமையாற்றமாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உ/த) பரீட்சையில் மேற்பார்வையாளர்களாகவோ உதவியாளர்களாகவோ இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் எவரும் கடமையாற்ற மாட்டார்கள் என மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் நேற்று ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற சங்க நிர்வாகப் பொதுக்கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த மாணவர்கள் கற்கக்கூடிய நிலையிலோ அன்றி ஆசிரியர்கள் கற்பிக்கக்கூடிய நிலையிலோ இல்லை. தற்போதைய நாட்டு நிலைமையில் பரீட்சையைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. எனவே பரீட்சை ஒத்திவைக்கப்பட வேண்டும் எனவும், கொழும்பு போன்ற வேறு பகுதிகளில் பரீட்சைக்குத் தோற்ற முயலும் சுயநலவாதிகளை சமுதாயம் அடையாளம் காணும் எனவும் தெரிவித்தார். இது சம்பந்தமாக கல்வி அமைச்சுக்கும் மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. (மு)

## நெல்விலை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் நெல் விலை அதிகரித்து உள்ளது. முன்னர் அருவி வெட்டும் காலத்தில் ஒரு மூடை 350 ரூபா விலையாக இருந்த பச்சைப் பெருமாள், மொட்டைக் கறுப்பன் நெல் தற்போது 750 ரூபாவாக விலை அதிகரித்துள்ளது. (24)

Registeresds News Paper at the G. P. O.

ஈழநாதம்

# "மண்ணை மீட்கும் வரை எமது போராட்டம் ஓயப்போவதில்லை"

## சில்லாலைக் கூட்டத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரை

(சில்லாலை)

எமது தாயகத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் எங்கள் அடுத்த தலைமுறையினரான இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து கொள்ளத் தொடங்கி விட்டனர். இது எமக்கு நிம்மதியையும், நம்பிக்கையையும் அளிக்கிறது. இந்த விடுதலை வேள்வி எங்கள் மண்ணை மீட்டெடுக்கும் வரை ஓயப் போவதில்லை. எதிரியை எமது மண்ணிலிருந்து விரட்டும் வரை விடுதலைப் புலிகள் உறங்கப்போவதும் இல்லை.

நேற்று முன்தினம் (18. 7. 90) சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடைபெற்ற மண்மீட்பு நிதிக்கான விளக்கக் கூட்டத்தில் நிதி சேகரிப்புப் பொறுப்பாளர்களில் ஒருவரும் விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பொறுப்பாளருமான புதுவை இரத்தினதுரை பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் இன்று ஸ்ரீலங்கா அரசு நன்றி கெட்டத்தனமாக தமிழ் மக்கள் மீது ஒரு அதர்ம யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. முழு இலங்கைக்குமாக வந்த இந்திய மேலாதிக்க ஆபத்தை விடுதலைப் புலிகளாகிய நாங்களும், எமது மக்களாகிய நீங்களும் சேர்ந்து வடக்கு - கிழக்குடன் தடுத்து நிறுத்தி, தமிழீழ எல்லைகளை மீறி சிங்களப் பகுதிக்குள் இந்திய ஆதிக்கக் கரங்களை நீளாது காப்பாற்றினோம். நாங்கள் உயிர்களை இழந்து, உடைமைகளை இழந்து, இழக்கக் கூடாத



பலவற்றை இழந்து இந்திய வல்லாதிக்கத்தை முறியடித்து வெற்றி கண்டோம். இந்த இரண்டரை வருட போராட்டத்தில் ஒரு சிங்களப் படை வீரன் இறக்கவில்லை. சிங்களவர்களின் சொத்துக்கள் சூறையாடப்படவில்லை, சிங்களப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படவில்லை. சகல துன்பங்களையும், துயரங்களையும் எங்கள் நெஞ்சங்களிலும், தோள்களிலும் நாங்கள்சுமந்து போராடி வெற்றிகண்டோம்சிங்களவர்களுக்கும்சேர்ந்துவந்தஆபத்தை நாங்கள் இடைநிறுத்திப் போராடினோம்; இந்திய ராணுவத்தை அனுப்பிய பின்னர் ஸ்ரீலங்காஅரசு எம் மக்கள் மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இது எவ்வளவு நன்றி கெட்ட செயல், நம்பிக்கைத் துரோகம், இந்திய இராணுவம் இங்கிருந்து போகும்வரை நண்பர்களாக நடித்தவர்கள் போன பின் எதிரிகளாகிப் போருக்கு அழைக்கின்றனர்.

இந்த யுத்தம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. நாங்கள் தர்ம யுத்தம் செய்கின்றோம். நீதியின் பக்கத்தில் நிற்கின்றோம். வீரம்மிக்க, விவேகம் மிக்க தலைவனைப் பெற்றிருக்கின்றோம். மண்ணையும், மக்

தளபதிகளைப் பெற்றுள்ளோம். சாவையே சரித்திரமாக்கும் வீரர்களையும், வீராங்கனைகளையும் பெற்றுள்ளோம். எனவே நாங்கள் வெல்வோம். இது உறுதி, நம்புங்கள் எம் மக்களாகிய நீங்கள் எம்மோடு இணைந்து நில்லுங்கள். வாழ்வோ, சாவே அது எதுவானாலும் இந்த மண்ணிலே நாங்கள் சேர்ந்து நின்று பெறுவோம். ஊரெங்கும், உலகமெங்கும் அகதியாய் அலைந்து சாவதிலும் பார்க்க, எம் மண்ணிலேயே அடம்பன் கொடிபோல் திரண்டு நின்று போராடுவோம்.

இந்தப் போராட்டத்தை எங்கள் தலைமுறைக்குள்ளேயே முடித்து வெற்றிகாண முயலுவோம். நாங்கள்பட்ட துன்பங்களையும், துயரங்களையும் எமது அடுத்த சந்ததியினர் படக் கூடாது. அவர்கள் இந்த நாட்டிலே நிமிர்ந்து நடக்கட்டும். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கட்டும். அவர்களுக்கு நாங்கள் செய்யும் பெரிய உதவி இதுவாகத்தான் இருக்கும். எனவே எங்கள் தலைவனது காலத்தில் எங்கள் தலைமுறையே, இணைந்து போராடித் தமிழீழத்தை அமைப்போம். அதை நிர்மாணிக்கும், நிர்வகிக்கும் பொறுப்பை அடுத்த தலைமுறையினரிடம் கொடுப்போம்.

எனவே போராட்டத்துக்கு உங்கள் பிள்ளைகள் வந்தால் தடுக்காதீர்கள். நீங்கள் முக மலர்ச்சியுடன் வழியனுப்பி வையுங்கள். உங்கள் தலைமுறையின் பிரச்சினை வேறு, புதிய தலைமுறையின் பிரச்சினைகள் வேறு. நீங்கள் அடிமையாகி, அகதியாகி வாழ்ந்தீர்கள், வாழ்கின்றீர்கள், ஆனால் அவர்கள் அப்படி வாழ விரும்பவில்லை. புதியதலைமுறை அச்சமின்றி, அடிமைத்தனமின்றி, இந்நாட்டில் உலாவ விரும்புகின்றனர். எனவே இரண்டு தலைமுறைக்குள்ளேயும் இருக்கும் இடைவெளியைப் புரிந்து கொண்டு அவர்களது இலட்சிய வேகத்துக்கு இடையூறு விளைவிக்காதீர்கள்.

மண்மீட்கும் விடுதலைப்புலிகளின் போராட்டம் வெற்றிகளின் எல்லையைத் தொட்டு நிற்கின்றது. எல்லாரும் சேர்ந்தால் வெற்றி வெகுதூரத்தில் இல்லை. உங்கள் பங்களிப்பே இதற்குப் பதில்தர வேண்டும்.

## தமிழ்க் கிராமப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள்

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்மக்கள் நெருக்கமாக வாழும் கிராமப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அகதிகள் தஞ்சமடைந்துள்ள கட்டடங்களை நோக்கியும், வீதியால் செல்லும் வாகனங்களை நோக்கியும் தொடர்ந்து ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தாக்குதல் காரணமாக தமிழ்க் கிராமப் பகுதிகளில் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் தொகை குறைந்துள்ளது.

அண்மையில் சாஸ்திரி கூழாங்குளம், ஓமந்தை ஆகிய பாடசாலைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் அவற்றுக்குள் தங்கியிருந்த சில அகதி மக்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## மீனவர் கைது

(திருமலை)

திருமலை கப்பல்துறை கடல் பகுதியில் மீன்பிடித்த ஆறு தமிழ் மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## வவுனியா பகுதியில் தேடுதல் சிலருக்கு கத்திக்குத்து

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர், அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிலரை கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இதே தினம் வவுனியா குளத்தருகில் நடமாடிய சிலருக்கு இராணுவத்தினர் கத்தியால் குத்தியுள்ளனர்.

வவுனியாவில் பதற்ற நிலைமை தொடர்ந்து நீடித்து வருகிறது. வெளிக்குளம், இறம்பைக்குளம், சேமமடுவில் குளம் போன்ற பகுதிகளில் மக்கள் குறைந்தளவில் வசித்து வந்த போதிலும் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு, தேடுதல் போன்றவற்றை அடுத்து அவ்விடங்களை விட்டு வெளியேறி வருவதாகக் கூறப்படுகிறது, (தி)

## பங்கீட்டு அட்டை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் பலபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவு விநியோகத்திற்கு மீண்டும் பங்கீட்டு அட்டை முறையை அறிமுகம் செய்துள்ளன.

இந்த அட்டைகள் தற்பொழுது கைவசமில்லாததினால் புதிதாகப் பலருக்கு இவற்றை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (24)

## குடிநீர் பிரச்சினை

(புங்குடுதீவு)

தற்போது தீவுப்பகுதியில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை அடுத்து சாட்டியிலிருந்து பெறப்படும் குடிநீரின் விலை அதிகரித்துள்ளது.

புங்குடுதீவின் சில பகுதிகளில் பௌசர்கள் மூலம் தொட்டிகளில் தண்ணீரை எடுத்து வைத்திருக்கும் சிலர் ஒரு கலன் தண்ணீர் ஒரு ரூபாவிற்கு விற்பனை செய்கிறார்களாம். அத்துடன் ஒரு குடம் தண்ணீர் இரண்டு ரூபாய் ஐம்பது சதம் விற்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள்

### கேரதீவு

(1 ஆம பக்க தொடர்ச்சி)

உணவுப் பொருட்களை கொண்டுவரும் லொறிகளை ஏற்றும் கடமைக்காக தயார் நிலையில் நின்றதாகவும் அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகளிலிருந்து தெரியவருகிறது சாவகச்சேரியில்

இப் பாதை தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹெலிக்கெப்டர் சாவகச்சேரிப் பகுதியிலும் தாக்குதலை நடத்தியது இத்தாக்குதலில் தேநீர்க் கடை ஒன்றின் உரிமையாளர் காயமடைந்தார்.

மேலும் தென்மராட்சிப் பகுதி வானில் ஆகாய விமானங்களின் நடமாட்டம் நேற்று அதிகாலையிலிருந்தே அதிகரித்திருந்ததால் அதிகாலையிலிருந்தே பதட்டம் நிலவி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## போராளிகளின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை

(தீவுப்பகுதி)

தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் இறந்த போராளிகளின் ஆத்மா சாந்தியடைவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை தீவுப்பகுதியிலுள்ள சகல ஆலயங்களிலும் தொடர்ந்து மணி அடிக்கப்பட்டு ஓசை எழுப்பப்பட்டதுடன் ஆத்மசாந்திப் பூசைகளும் இடம் பெற்றன.

### ரஞ்சன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற சம்பவங்களில் பொது மக்கள் கொல்லப்பட்டது குறித்து விசாரணை நடத்துவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாசம்மதித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

மேலும் கிழக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்ட அநுரா பண்டாரநாயக்கா அரசின் இறைமைக்கும், ஒற்றுமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது ஆகவே இதனை எதிர்த்து நாம் எல்லோரும் ஒருமித்து குரல் கொடுக்க

### தமிழ்

கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் பேசிய மைத்திரிபால சேனநாயக்கா வடக்குக் கிழக்கு மாகாணத்தை இலங்கை இராணுவம் மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு தாம் பூரண ஒத்துழைப்பை அளிப்பதாக அறிவித்துள்ளார்.

அதேவேளை இக்கட்சியைச் சேர்ந்த லக்ஸ்மன் ஜெயக்கொடி விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துமா? எனக் கேட்டார்.

### புலிகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இன்று வரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நில அளவைத் திணைக்களத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் இன்று காலை 8.00 மணிக்கு யாழ் கச்சேரி நில அளவைத் திணைக்களத்திற்கு தவறாது சமுகமளிக்

### இன்று தமிழகம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஹர்த்தால் இன்று மாலை ஆறுமணிவரை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலை ஒட்டி எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறாத வகையில் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் தமிழக அரசினால் எடுக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து எதிர்க் கட்சிகளும் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதின் நிமிர்த்தம் எதிரான செயல்கள் நடக்காதென்றும் தமிழக அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதேவேளை ஏற்கனவே குறிப்பிட்டபடி அத்தியாவசிய சேவைகள் சிலவற்றை தவிர அனைத்து சேவைகளும் இன்று இயங்காமல் உள்ளதுடன், விமான போக்குவரத்து சேவைகளும் பல மாற்றங்களுடன் இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

### ஸ்ரீலங்காவிற்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சர்வோதய இயக்கம் மூலமுமே நிவாரணம் வழங்கியுள்ளன.

### புலிகள் ஜே. வி பி. அல்ல

ஜே. வி. பி. இயக்கத்தைப் போல விடுதலைப் புலிகளும் அழிக்கப்பட்டுவிடுவார்களென்று சிறிலங்கா ஜனாதி

### உதவி வழங்கும் அமைப்புக்கள் கோரிக்கை

அதேவேளை இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு இலங்கைக்கு உதவி வழங்கும் 16 ஐரோப்பிய அமைப்புக்கள் இரு பகுதியினரையும் கேட்

தாகவும் கூறப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் குடிநீர்க் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளார்கள். (22)

நில அளவைத் திணைக்களத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி நில அளவை அத்தியட்சகர் விஜயரட்ணம் கேட்டுள்ளார்.


# இடம் மாற்றம்

எமது அன்புக்கினிய தமிழீழ மக்களே!
வாடிக்கையாளரின் நன்மையைக் கருத்தில்
கொண்டு எமது புத்தகசாலைகளை
ஒட்டுமடம் சந்திக்கு அண்மையில்,
682/64, செபஸ்தியார் வீதியில் அமைத்துள்ளோம்
என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

**மக்மிலன் புத்தகசாலை**
ஒட்டுமடம் (சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம்.

**ஶ்ரீகாந்த் புத்தகசாலை**
ஒட்டுமடம் (சந்திக்கருகாமையில்)
யாழ்ப்பாணம். (B/1266)



**வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு**

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
**நியூ லலிதா ஸ்தாபனத்தார்**

(B 1258)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


எதிர்த்து நாம் எல்லோரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என்றுகேட்டுள்ளார்

## க. பொ. த.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன் ஆகியோர் இத்தூதுக் குழுவில் அங்கம் வகித்தனர்.

பங்கர்களிலும் (பாதுகாப்பு அரண்) அகதி முகாம்களிலும் பீதியுடன் தங்கியுள்ள மாணவர்கள் பரீட்சைக்கு தயார் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். போக்குவரத்து வசதிகள் இல்லாத இந்நிலையில் கொழும்பில் இருந்து வினாப்பத்திரங்களையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் எவ்வாறு பெற்றுக் கொள்வது அவற்றை எவ்வாறு பரீட்சை நிலையங்களுக்கு அனுப்புவது என்றும் இவர்கள் வினவினார்கள் (75)

## அகதிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாசா அண்மையில் கூறியுள்ளமைக்கு பதிலளிக்கும் முகமாகவே கலைஞர் கருணாநிதி இலங்கை அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து மீண்டும் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இதனைத் தெரிவித்த முதல்வர் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமரச பேச்சுக்கள் அவசியம் என்றும் கூறியுள்ளதுடன், அரசியல் தீர்வே உறுதியானதென்றும், இதுகுறித்து அண்மையில் நடைபெற்ற தி.மு.க. நிருவாகக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் சுட்டிக் காட்டினார்.

இராமேஸ்வரம், கச்சதீவு கடற்பகுதிகளில் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் சுடப்பட்டதும் குறித்து தமது பலத்த கண்டனத்தை செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்த முதல்வர் இது குறித்து மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

## புலிகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர்

தமிழீழ விடுதலைப் புலிகளை சேர்ந்த போராளி சிவபாரதி மகிழவெட்டுவான் வீரமரணம் அடைந்துள்ளார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்தியுள்ளனர்.

## எதிரொலி

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தொடர்ந்த வண்ணம் உள்ளது

**பெரேரா எம்.பி. (சு.க):-**

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து இளைஞர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

**லயனல் ராஜபக்ஷ எம்.பி. (சு.க):-**

இதுவரை காலமும் இந்நாட்டை ஆண்டுவரும் கட்சிகளே இன்றைய பிரச்சினைக்குக் காரணமாகும்.

**மத்துபண்டார எம்.பி (சு.க):-**

இனம் தெரியாதவர்களால் ஆள் கடத்தப்படும் சம்பவம் இன்றும் இடம் பெற்ற வண்ணமே உள்ளது.

## அரச அதிபர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதர எம். பிக்கள் இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி தமது ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிக்கஇருப்பதாக முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெளிநாட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

கிழக்கில் இதுவரை இடம் பெற்ற யுத்தத்தில் 543 படையினர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளதுடன் 600 பேர் காயமடைந்துள்ளதாகவும்: மாங்குளம் சம்பவத்தில் ஏழு படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸார் உட்பட 654 படையினரை காணவில்லை என்றும் திரு. ரஞ்சன் தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

மிக்க தலைவனைப் பெற்றிருக்கின்றோம். மண்ணையும், மக்களையும் கண்போல் கருதும்

## பரந்தன்

(1ஆம் பக் த் தொடர்ச்சி)

இடம் பெற்றது.

கிளிநொச்சியில் காலையிலும், பிற்பகலிலும் பரந்தனிலும் தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதல் ஆனையிறவு-குறிஞ்சாத் தீவில் இறக்கப்பட்ட படையினருக்கு உதவியாக விடுதலைப் புலிகளின் கவனத்தைத் திருப்பும் நோக்கில் செய்யப்பட்டது.

## சிறிலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலாக முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகளை ஷெல் அடித்தும் குண்டுவீசியும் நிலைகுலையச் செய்யமுடியாத சிறிலங்கா விமானப்படை இப்போது புதிதாக இரசாயனக் குண்டுகளைத்தயாரித்து பரீட்சித்துப் பார்க்கிறது. இந்தக் குண்டுகளில் ஒன்று யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியிலுள்ள வீடொன்றில் கூரையைப் பிய்த்துக்கொண்டும் விழுந்திருக்கிறது.

கோட்டை பகுதிகளில் மட்டுமல்லாது இவ்இரசாயனக் குண்டுகள் நகரின் பல இடங்களிலும் போடப்பட்டுள்ளது. ஸ்ரான்லி வீதியை அண்டியுள்ள ஒரு வீட்டின் முற்றத்திலிருந்த காதல் குருவிகள் (LOVE BIRDS) கூட்டில் வீழ்ந்ததால் பதின்மூன்று குருவிகள் இறந்துள்ளன.

பலவர்ணங்களிலும் அமைந்திருந்த இந்த குண்டுகள் பிளாஸ்ரிக் கொள்கலன்களில் இறுக்க மூடப்பட்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. நிலத்தில் வீழ்ந்ததும் இந்த பிளாஸ்ரிக் கலன்கள் வெடித்துச் சிதறியதால் உள்ளிருந்தவை நாலா பக்கமும் சிதறியுள்ளதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்குண்டுகளில் இருந்து மலத்தை ஒத்த துர்நாற்றம் வீசுகிறது.

அழிக்கப்பட்டுவிடுவார்களென்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தினாவும் கூறிவருவதை அமெரிக்கராஜாங்க அதிகாரி ஒருவர் கண்டித்துள்ளார்.

ஜே. வி. பி.யுடன் விடுதலைப் புலிகளை ஒப்பிடக்கூடாதென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்,

சிறிலங்கா அரசு உதவி கோரி விடுத்த கோரிக்கைக்கு வெளிநாடுகள் மருத்துவ உதவி மட்டுமே பெரும்பாலும் அளித்துள்ளன. அமெரிக்கா கூட பதினொரு லட்சம் ரூபா செலவில் இராணுவ மருத்துவமனையொன்றைத்தான் அமைத்துக் கொடுக்க முன்வந்திருக்கிறது.

## குறிஞ்சாத்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மபுரம் ஆகும். இவர்களுக்கு விடுலைப் புலிகள் தங்கள் வீரவணக்கத்தைத் செலுத்தியுள்ளனர்.

கைக்கு உதவி வழங்கும் 16 ஐரோப்பிய அமைப்புக்கள் இரு பகுதியினரையும் கேட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் தொடர்ச்சியா இப் 16 ஐரோப்பிய அமைப்புக்களுமே இலங்கைக்குத் தொடர்ச்சியாக உதவி வழங்கி வருபவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமது பிரஜைகள் பற்றி வெளிநாடுகள் கவலை

மேலும் வடக்குக் கிழக்கில் உள்ள தமது பிரஜைகள்பற்றி ஐரோப்பிய அமெரிக்கா நாடுகள் கவலை அடைந்துள்ளன. அந்நாடுகள் தமது நாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பிற்கு இலங்கை அரசாங்கத்திடம் உத்தரவாதம் கேட்டுள்ளன. சுவிஸ்சலாந்து தனது 100 பிரஜைகள் வடக்குக்கிழக்கில் உள்ளதாக அறிவித்துள்ளது. அத்தோடு அவர்களின் பாதுகாப்பையிட்டு கவலையடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

## திரு. சின்னப்பா கந்தசாமி

(சாமி அன் சன்ஸ் உரிமையாளர்)

பலாலி வீதி 2ஆம் ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்ட திரு. சின்னப்பா கந்தசாமி 18-07-90 அன்று சிவபதம் அடைந்தார். இவர் கன்னியாபரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இரத்தினகாந்தீஸ்வரி, இரத்தினேஸ்வரன், ஜெயக்குமாரி (பிரான்ஸ்), இரவீந்திரன் (பிரான்ஸ்), இரகுநாதன் (பிரான்ஸ்), ஜெயமாலினி, சுவேந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன், சாந்தகுமாரி, ரவீந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-07-90 அன்று நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கட்கு அறியத் தருகின்றோம்.

9/1, 2ஆம் ஒழுங்கை
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்
மருமக்கள்.

(R/534)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

20-07-1990

அடக்குமுறை, ஆக்கிரமிப்புஆகியவை போராட்டத்திற்குவழி சமைக்கின்றன போராட்டத்தை நசுக்க எடுக்கும் நடவடிக்கைகள் புரட்சிக்கு வழிகோலுகின்றன.

புரட்சிக்கு எதிரானநிகழ்வுகள் சுதந்திரத்திற்கு வித்திடுகின்றன...

நாம் சுதந்திரத்திற்கான விடுதலைப் போரில் எந்தக் கட்டத்தில் நிற்கிறோமென்பது தான் முக்கியம்.

— மார்ட்டின் லூதர் கிங்



ஈழத்தாயின் சேலை கலைத்து
மானமிழக்கவும்
வேலை நிகர்த்த விழியைமெச்சி
வீட்டில் கிடக்கவோ?
எழிலை இழந்து தழலாய் எரியும்
நிலத்தைக்காக்கவும்
மழலை சுமந்த மடியும் இந்த
மண்ணைச் சுமக்குமே......

● ● ● ●

கறிசமைத்த நெருப்பு இப்போ
நெஞ்சில் எரியுது
கரிதுடைத்த கையில் இங்கே
துவக்கு தவழுது
வெறிபடைத்த கயவர் கூட்டம்
அலறி ஓடுது
வீர மங்கை எழுந்து விட்டாள்
பொழுது புலருது.

- ம. சந்திரபோஸ்



## போராட்டத்தின் நிழலில்

"அண்ணை இதை வைச்சிருங்கோ. நான் சென்றிக்குப் போறன். ஜெயிலுக்கு உள்ளேயும், வெளியில் வந்தாப் பிறகும் நான் எழுதியதெல்லாம் இதில் கிடக்கு. இனி இது உங்கடபொறுப்பு. ஏனென்டா நான் இனி திரும்பி வருவனோ தெரியாது" இவ்வாறு கூறி ஒரு பைலை ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறான் சாளி. இரண்டு தினங்கள் சாளி எதிர்பாராத விபத்தொன்றில் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான் என்றசேதி கிடைக்கிறது.

சாளியின் அந்த பைலைத் திறக்கிறோம். இறுதியாக சாளியினால் தரப்பட்ட படத்தையும் கவிதையையும் காண்கிறோம். பட்டமரம் ஒன்றில் சென்றியில் இருக்கும் ஒரு போராளியின் உணர்வுகளைச் சித்தரிக்கும் கவிதையொன்றைப் படிக்கிறோம். பேச்சு வார்த்தையால் எந்தப் பலனுமில்லை. ஆயுதப் போராட்டமே ஒரே தீர்வு என்பதை அது வலியுறுத்துகிறது. சாவு தன்னை நெருங்குகின்றது என்பதை தனது உள்ளுணர்வுகளினால் உணர்ந்து கொண்ட போராளி இவன். இலட்சியத்தை நேசிக்கும் இந்தப் போராளியின் சத்தியமான வார்த்தைகளை மீண்டும் படிக்கிறோம். இதயம் கனக்கிறது.

ஒரு சிறந்த ஓவியனாக, கவிஞனாக, எழுத்தாளனாக, புகைப்படக் கலைஞனாக இவை எல்லாவற்றிற்கும் மேலாக உன்னதமான போராளியாக வாழ்ந்த சாளிக்கு வயதோ இருபத்தைந்து கூட ஆகவில்லை. இந்த வயதிற்குள் சகலகலாவல்லவனாக திகழ்ந்த சாளியின் ஆற்றலைக் கண்டு நாம் அனைவருமே வியந்ததுண்டு, பண்டிதர் சரணாலயத்தின் சுவர்களில் வரையப்பட்டிருந்த சகல ஓவியங்களுமே சாளியின் கைவண்ணமே 'ஈழமுரசு' பத்திரிகைதான் இவனது ஆற்றல்களை இனங்கண்டு இவன் திறமைகளை வெளிப்படுத்தியது. முதன்முதல் தன்னோடு கூட இருந்து போராடி களத்தில் மடிந்த ஒரு போராளியைப் பற்றியதான கதை ஒன்றை உணர்வு பூர்வமாகச் சித்தரித்திருந்தான் சாளி. அதைத் தொடர்ந்து வேறு சில படைப்புகளுமே வெளியாகின. தளபதி கிட்டுவுடன் எப்போதும் காணப்படும் இவன் சதிகாரர்களினால் ஒரு காலை கிட்டு இழந்து வைத்திய சிகிச்சைக்காக இந்திய செல்லும்போது அவருடனே பயணமானான். அரசியற் சூழ்நிலையின் மாற்றங்களினால் இந்தியப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதின. தமிழகத்தில் இருக்கும் புலிகளுக்கோ வீட்டுக் காவல். இந்நிலையிலும் "தமிழீழம்" என்ற சஞ்சிகை தமிழகத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. அந்தச் சஞ்சிகையில் வெளிவந்த சித்திரங்களும் சாளியினுடையதே. தனது எண்ணப்படி புலிகளை ஆட்டுவிக்க முடியாது என்பதை இந்திய அரசு சந்தேகமறத் தெரிந்து கொண்டபின் தமிழகத்தில் இருந்த புலிகளை சிறையில் தள்ளியது. பின்னர் எமது சொந்த மண்ணுக்கு நாடு கடத்தியது. இதற்கிடையில் தான் எத்தனை வாக்குறுதிகள்? எத்தனை நம்பிக்கைத் துரோகங்கள்? சென்னைச் சிறைச்சாலை, பருத்தித்துறை முகாம், காங்கேசன்துறை முகாம் என்று சாளியின் சிறைவாழ்வும் தொடர்ந்த என்ன நோக்கத்திற்காகஇவர்களை சிறையில் அடைத்ததோ அந்த நோக்கத்திலும் இந்திய அரசு தோல்விஅடைந்தது. சிறைச்சாலைகளை கல்விச்சாலைகளாக்கினர் புலிகள்.



கப்டன் சாளி

இந்திய அரசின் நடவடிக்கைகளினால் மனம் நொந்திருந்த போராளி சாளி S.L.R. ஒன்றை ஊன்றியபடி காணப்படும் மகாத்மா காந்தியின் ஓவியம் ஒன்றை வரைந்திருந்தான். தப்பித்தவறி இந்தியப்படையில் சேர்ந்துவிட்ட கொஞ்சம் மனச்சாட்சியுடைய கேணல் சுக்கிந்தர் சிங் இந்த ஓவியத்தைப் பார்த்தார். அவரை உறுத்தியது இவனது ஓவியம். கைகொடுத்துப் பாராட்டிவிட்டுச் சென்றார். தனது போராட்ட அனுபவங்களை எழுத்துருவமாக்கினான் சாளி. எங்களுக்கு விடுதலை கிடைக்குமா? இவை வெளியில் செல்லுமா? என்றெல்லாம் நினைத்து அவன் முடங்கிக் கிடக்கவில்லை. தனது கடமையைத் தொடர்ந்தான். மானிப்பாயில் சோப் தொழிற்சாலையொன்றில் நடந்த இராணுவ முற்றுகையை எதிர்த்துப் போராடி தனது முதல் கள அனுபவத்தை புத்தக வடிவமாக வரைந்தான். எந்தப் போராளிக்கும் தனது முதல் கள அனுபவங்கள் மறக்க முடியாதவையாக இருக்கும். எனவே தனது உள்ளுணர்வுகளையெல்லாம் அதில் கொட்டியிருந்தான் சாளி. அதுமட்டுமல்ல சுமார் பத்துப் பேரை தனது மாணவர்களாக்கி அவர்களை சிறந்த ஓவியர்களாக இந்த மண்ணுக்குக் கொடுத்தான் சாளி. தியாகி திலீபனில் மிகவும் மதிப்பும், அன்பும் கொண்டவன் இவன். எனவே திலீபனின் இரண்டாவது நினைவு தினத்தன்று கையெழுத்துப் பிரதியாக சிறந்த ஓவியங்களையும், கவிதைகளையும்கொண்டமலர்ஒன்றை உருவாக்கி வெளியிட்டான், தியாக திலீபம் என்று அதற்கு பெயரிட்டிருந்தான். மிகக் குறைந்த வசதிகள் உள்ள சிறைச்சாலையினுள் இப்படியெல்லாம் செய்ய முடியும் என்று செய்து காட்டினான். அதுமட்டுமல்ல திலீபனின் நினைவாக ஓவியப் போட்டியொன்றை நடத்தினான். சிறந்த கருத்தும், அழகும் உள்ள ஓவியங்களுக்குப் பரிசும் வழங்க ஏற்பாடு செய்தான்.

இவனது திறமைகளை அறிந்த மேஜர் ஜெயராம் இவனையழைத்து தன்னை ஒரு ஆட்டுமந்தைக் கூட்டம் பின்தொடர்வதாக பிரபாகரன் நினைப்பதை ஓவியமாக வரையச் சொன்னார். படம் வரையாவிட்டால் விடுதலை இல்லையென்று மிரட்டினார். ஐந்து வருடங்கள் உனதுபைலை எடுக்கமுடியாதபடி சிவப்புப் பென்சிலால் கீறிவிடுவேன் என்று மிரட்டினார். வாழ்வை அனுபவிக்க வேண்டிய இளமைப் பருவம் என்பது சாளிக்கு நினைவில் வரவில்லை. போராளிகள் செய்ததியாகம் தான் நினைவுக்கு வந்தது. எந்த விளைவுக்கும் தயார்



மேஜர் ஜெயராம்

என்பதைத் தெரிவித்துவிட்டு உன்னதமான போராளியாக தனது சிறைக்குத் திரும்பினான், இதையெல்லாம் எழுத்து வடிவத்தில் ஈழநாதத்தில் கொண்டு வந்திருந்தான் அவன் "அடிபணியா எரிமலைகள்" என்ற பெயரில் அவை வெளியாகியிருந்தன.

போராட்டக்களத்தில் இவனது பங்கு மறக்கக் கூடியதல்ல. மானிப்பாய் சோப் தொழிற்சாலை முற்றுகையிலிருந்து அதன்பின் இராணுவத்தினருடன் நடந்த ஏராளமான மோதல்களில் இவன் தனது திறமையை வெளிப்படுத்தினான். தளபதி கிட்டு கலந்து கொண்ட தாக்குதல்களிலெல்லாம் பெரும்பாலும் கூடவே இவனும் கலந்து கொண்டுள்ளான். பண்ணைப் பொலிஸ் நிலைய விடுதி மீதான தாக்குதல் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது.

ஸ்ரீலங்காப் படைகளுடனான தற்போதைய இந்த மோதலில் காங்கேசன்துறைப் பகுதியில் இவன் தனது கடமையை ஏற்றிருந்தான், கடந்த 13.7.90 அன்று இரவு வீதி விபத்து என்ற வடிவில் விதி இவனை நெருங்கியது. இவனது பேனா போர்க்கால இலக்கியங்களைப் பிரசவித்தது இவனது தூரிகை இந்த மண்ணின் நிலைக் கண்ணாடியாகியது, இவனது துப்பாக்கி ஒலி துட்டர்களுக்கு நாராசமாகியது" இவன் மறைந்த பின்னும் அது கனன்றுகொண்டேயிருக்கிறது.

சாளியின் ஓவியத்தில் கலைத்துவம் உண்டு.
அவனது கவிதைகளில் கவித்துவம் இருக்கும்.
அவனது கதைகளில் தத்துவம் மிளிரும்.
கட்டுரைகளில் அவனது வித்துவம்கண்டோம்
களத்தில் அவனது தனித்துவம் கண்டோம்.
இப்படிப் பல மகத்துவம் மிக்க ஒரு இளம்
மேதை இந்தச் சின்ன வயதில் போனானே!

□ பொருளாதாரம் . . .

# பொருளாதார சுதந்திரத்திற்கு அடித்தளம் அமைப்போமா?

ஒரு இனம் அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடும் அதே வேளையில் அதே அளவு தீவிரத்துடனும் அதற்கு மேலாகவும் அது பொருளாதார சுதந்திரத்திற்காகவும் போராட வேண்டும். பொருளாதார சுதந்திரம் எனப்படுவது ஒரு இனம் தனது அனைத்துத் தேவைகளையும் தானே பூர்த்தி செய்து கொள்வதாகும். இப்படியான நிலையிலுள்ள ஒரு இனம் வெகு இலகுவாக அரசியல் சுதந்திரப் போராட்டத்தினை எடுத்துச் செல்லும்.

தனது தேவைகளுக்குப் பிற நாடுகளில் அல்லது தான் வசிக்கும் நாட்டின் பிற இனங்களில் தங்கியிருக்கும் ஒரு இனம் மிகவும் பலவீனமான நிலையிலேயே அரசியல் சுதந்திரத்திற்காகப் போராட வேண்டியிருக்கும்.

இன்று இலங்கையில் எமது இனத்திற்கெதிராக ஒரு யுத்தமே பிரகடனப்படுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது மக்களில் பல்லாயிரக்கணக்கானோர் பரம்பரை பரம்பரையாக தாங்கள் வசித்து வந்த இடங்களை விட்டு பலத்த உயிரிழப்புக்களுடனும்பொருளிழப்புக்களுடனும் எம்மை நோக்கி அகதிகளாக வந்துள்ளனர். இவர்களை வாழ வைப்பது எம் கடமை. சுதந்திரப் போராட்டத்தினை விரைவுபடுத்தவும் இவர்களின் துயர் துடைக்கவும் எமது பொருளாதாரத்தை நாம் துரிதமாககட்டியெழுப்ப வேண்டும்.

போராளிகள் அரசியல் சுதந்திரத்திற்கான ஆயுதப் போராட்டத்தில் மட்டுமே ஈடுபடுவர். தாம் நேசிக்கும் தமது மக்களுக்காக எல்லாவற்றையும் துறந்து வந்த இவர்கள் எந்நேரமும் மரிக்க நேரிடலாம். அவர்களிடமிருந்து வேறு எதனையும் நாம் எதிர்பார்க்க முடியாது. போராடுவதற்கு மட்டுமே அவர்களுடைய நேரம் போதுமானது.

போராளிகள் ஒரு புறத்தில் போரில் ஈடுபட்டிருக்க போரில் ஈடுபடாத சமூகத்தில் மற்றப் பகுதியினர் பொருளாதார சுதந்திரத்திற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்க வேண்டும். பொருளாதாரத்தில் பாரிய அபிவிருத்தி ஏற்படுமிடத்து போரினால் ஏற்படும் இழப்புக்கள் சமூகத்தை அதிகம் பாதிக்கமாட்டா. பொருளாதார அபிவிருத்தி ஒரு நீண்டகாலப் போருக்கும் பெருமளவு உதவுகிறது.

அரசியலில் இரு துருவங்களாக இருந்த ஜனாதிபதி பிரேமதாஸாவும் சிறிமாவோ அம்மையாரும் தமிழினத்தை அழிப்பதற்கு ஒன்றிணைந்துவிட்டனர். சகல கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அனைவரும் புத்தகுருமாரும் பத்திரிகையாளர்களும் எமதுஇனத்தைச் சேர்ந்த துரோகக் கும்பல்களும் அவ் விருவருக்கும் பின்னே அணிவகுத்து நிற்கின்றனர். நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஒரு நீண்டகாலப் போரும் எம் மீது திணிக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு உணவுத் தடையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போரினை முறியடித்துஇந்தத் தடையையும் தகர்த்தெறிவது பொதுமக்களாகிய எங்களிலேயே பெருமளவில் தங்கியுள்ளது.

நமக்கு வேண்டிய நெல்லை இதுவரை காலமும் எமக்கு விளைவித்துத் தந்த மட்டக்களப்பு, திருமலை, வன்னிப் பகுதி மக்கள் மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளினால் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டனர். ஆகவே இதுவரை காலமும் எமக்கு உணவளித்த அவர்களுக்குஉணவளிக்கும் முகமாக நாங்கள் இராணுவநடவடிக்கைகளால் பாதிக்கப்படாததமிழீழப் பகுதியில் நெல் விவசாயத்திற்குப் பொருத்தமான ஒவ்வொரு அங்குல நிலத்திலும் நெல்விளைவிக்க வேண்டும்.

## திருவெண்காடர்

இதுவரை தரிசாகக் கிடந்த நிலங்களும்இனிமேல்பிரயோசனப்படுத்தப்பட வேண்டும்.

கோதுமைமா அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு எமக்கு வழங்கப்படுவது. வெள்ளைக்காரனே இந்த மாவை எமக்கு அறிமுகப்படுத்தினான். எமது முன்னோர்கள் இந்த மாவைப் பற்றி அறிந்திருக்கவில்லை. போஷாக்கு மிகுந்த சாமி எள்ளு, தினை, பயறு,உழுந்து போன்ற குறுகிய காலப் பயிர்களை அவர்கள் உற்பத்தி செய்து புசித்து திடகாத்திரர்களாகவும், நோயற்றவர்களாகவும் வாழ்ந்தனர். நாமும் இவற்றினை மீளப் பயிரிட்டுப் புசித்து திடகாத்ரர்களாக வாழ்வோமாக.

எமது பிரதேசத்தில் இந்தப் பயிர்களை விளைவிக்கக் கூடிய எத்தனையோ காணிகள் பயிரிடப்படாது வீணே கிடக்கின்றன. பல வருடங்களுக்கு முன்னர் நெல் அறுவடை முடிந்ததும் அதே காணிகளில் எள்ளு, பயறு, உழுந்து, போன்ற பயிர்களை விளைவிக்கும் பழக்கம் இருந்தது. அந்தப் பழக்கத்தினை நாங்கள் மீள ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நிறைய நெல் விளையும் பிரதேசங்களிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது மில் உரிமையாளர்கள் மா அரைக்கும் ஆலைகளை ஏற்படுத்தி அரிசிமா தயாரித்து தமிழீழத்தின் அனைத்துக் கூட்டுறவுக் கடைகளிலும் பிற கடைகளிலும் விற்பனை செய்து எமது மக்களிடையே கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவைப் பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி விற்கப்படும் அரிசிமா தரத்தில் உயர்ந்ததாகவும் கோதுமை மாவை விட விலை குறைந்ததாகவும் இருக்க வேண்டும்.

இப்போது சீனிக்குப் பலர் அலைந்து திரிகிறார்கள் ஏன் இப்படி அலைய வேண்டும்? சீனிக்குப் பதிலாக பனங்கட்டியைப் பாவிக்கலாமே! இப்போது சீனிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டதால் பனங்கட்டியும் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஆனால் சீனி நிரந்தரமாக இனிக் கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டால் பனங்கட்டி உற்பத்தி எத்தனை மடங்கு அதிகரிக்கும் எம் மக்களில் எத்தனை பேர் பயன் பெறுவர்? ஆனால் பனங்கட்டியின் விலை சீனியின் விலையை விடக் குறைந்ததாகவே இருக்க வேண்டும்.

மரவள்ளி வத்தாளை ஆகியவற்றை விந்தைப் பயிர்கள் என்பர். நீண்ட காலங்களுக்கு போர்கள் நடக்கும் நாடுகளில் இவைகளே பாரிய அளவில் பயிரிடப்பட்டு அரிசிமா ஆகியவற்றிற்குப் பதிலாகப் உட்கொள்ளப் படுகின்றன. நாமும் இவற்றினை நிறைய பயிரிட்டு எமது சுதந்திரப் போருக்கு உதவலாமே!

குண்டுகளிலிருந்தும் ஷெல்களிலிருந்தும் தப்புவதற்கு பாதுகாப்புக் குழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கென ஏராளமான தென்னை, பனை மரங்கள் தறிக்கப்படுகின்றன. இதனால் எமது பொருளாதகரத்திற்குத் தான் எத்தனை பாதிப்பு? ஆனால் தறிக்கப்படும் மரம் ஒவ்வொன்றிற்கும் பதிலாக ஆகக் குறைந்தது மூன்று கன்றுகளையாவது நடுவோமாயின் எமது பிற்காலச் சந்ததி எவ்வளவு பயன் பெறும்?

வீடுகளில் நிறையப் பழமரங்களை நடுவதன் மூலமும் நாம் ஒரளவிற்கு எமது உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நல்ல நீர் வசதியுள்ள வளவுகளில் மா, பலா, பப்பா, கொய்யா போன்ற பழ மரங்களை நாம் நட்டுப் பூரண பயன் பெற வேண்டும் ஒரு வேளை உணவில் கணிசமான அளவு பழங்கள் சேர்க்கப்படுவது தேகாரோக்கியத்துக்கு மிகவும் உகந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக இயன்றவரை நாம் தமிழீழத்தில் விளைந்த அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையே வாங்குவதற்கு திடசங்கற்பம் பூண வேண்டும். வியாபார ஸ்தாபனங்களும் அதிக அளவில் தமிழீழப் பொருட்களின் விற்பனையையே ஊக்குவிக்க வேண்டும்.

எத்தகைய பயங்கரமான சூழ்நிலையிலும் நாங்கள் அனைவரும் எமது தொழில் முயற்சிகளை முடிந்த வரை மேற்கொண்டே ஆகவேண்டும். எல்லோரும் எதுவுமே செய்யாது முடங்கிக் கிடப்போமாகில் நாங்கள் அழிந்து போக நேரிடும். நாம் இதுவரை காலமும் ஈடுபட்ட முயற்சிகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபடுவது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு பெரிதும் துணை நிற்கும் என்பதை நாம் மறத்தலாகாது. ●

□□□

# இன்றைய நிகழ்வுகள்; நாளைய வரலாறுகள்

□□□

போராட்ட காலங்களில் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் மூலம் வெளியிடப்படும் செய்திகள் அச்சம் தருபவையாக அமைதல் சகஜம். அத்தகைய செய்திகள் போராட்ட நிகழ்வுகளையே கருவாகக் கொண்டுள்ளமையால் அவை போராட்டத்தின் செல்நெறியைப் பாதித்து விடுவதில்லை. மாறாக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போராளிகளுக்கு உத்வேகம் ஊட்டுபவையாகவே அமைகின்றன. மாபெரும் ரஷ்யப் புரட்சியின் போது வெளியான செய்திகள் இன்றைய சமகால நிகழ்வுகளுடன் எவ்வளவு தூரம் ஒன்றிணைந்தவையாகவுள்ளன என்பதை புரட்சிகால சம்பவங்களை ஒரு கணம் உள்வாங்கிக் கொள்ளும் போது பல விடயங்களை அவை புலப்படுத்துகின்றன.

### ரஷ்ய புரட்சியின் போது...

கிரெம்ளினைப் பீரங்கிக் குண்டுகள் கொண்டு தாக்குகிறார்கள். பெத்ரொகிராது தெருக்களில் கதிகலக்கம் உண்டாக்கும் படியான முறையில் இந்தச் செய்தி வாய்க்கு வாய் அடிபட்டுப் பரவிற்று. வெண்மணியாம் எமது அன்னை மாஸ்கோவிலிருந்து வந்தவர்கள் பயங்கரக்கதைகள் சொன்னார்கள். ஆயிரம் ஆயிரமாய்க் கொல்லப்பட்டுவிட்டார்கள் தீவெர்ஸ்காயாவும் குஸ்னேத்ஸ்கி மோஸ்தும் தீக்கிரையாயின. வசீலி பிளழேன்னி மாதா கோயில் புகையும் பாழிடமாயிற்று; உஸ்பேன்ஸ்கி தேவாலயம் தகர்ந்துவிட்டது. கிரெம்ளின் ஸ்பாஸ்கி வாயில் வளைவு ஆட்டங் கண்டு விட்டது. டூமா தகர்ந்து தரை மட்டமாயிற்று.

ஆதாரம்:- ஜோன்ரீட் எழுதிய உலகை உலுக்கிய பத்து நாட்கள்

### சமகால நிகழ்வுகள்

யாழ். நகர் மீது ஒரே வாரத்தில் மூன்றாவது தடவையும் விமானத்தாக்குதல். இதனால் சுமார் 13 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம். துறைமுக நகரமான திருமலையிலிருந்து அகதியாக தப்பிவந்தவர்கள் அங்கு சிங்கள இராணுவத்தாலும் சிங்கள ஊர்காவல்படையாலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களது சோகக் கதைகளை கண்ணீர் மல்க கதை கதையாகச் சொல்கிறார்கள். அம்பாறைப் பிள்ளையார் கோயில் தீயிடப்பட்டது. அங்குள்ள பஞ்ச முகப் பிள்ளையார் சிலையை உடைத்த சிங்களக் குண்டர்கள் அதனைக் குளத்தில் போட்டனர். முல்லைத்தீவு பெந்தகொஸ்தே தேவாலயம் கடற் பீரங்கிக் குண்டுத்தாக்குதலால் முற்றாகச் சேதமுற்றது. தர்மபுரம் கஸ்தூரிபா அனாதைக் குழந்தைகள் இல்லத்தின் மீது குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின. ஆறு அநாதைக் குழந்தைகள் படுகாயமடைந்தனர். கொழும்புத்துறையில் முதியோர் இல்லத்தின் மீது குண்டு வீச்சு; தம்பலகாமம் வீதியில் தமிழர்கள் வெட்டிக் கொலை; மட்டக்களப்பு சந்தி பள்ளிவாசல் உடைக்கப்பட்டு அங்கிருந்த குர்ஆன் புத்தகங்கள் எரிக்கப்பட்டன. திருமலை செல்வம் அகதி முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் 30 அகதிகள் படுகொலை 35 பேருக்கு மேல் படுகாயம்.

இப்படியாக இன்றைய சமகால நிகழ்வுகள் பற்றிய செய்திகள் வெளியாகிய வண்ணமுள்ளன.

எப்படி அன்றைய செய்திகள் இன்றைய வரலாறோ அப்படி இன்றைய செய்திகளும் நாளைய வரலாறாக உருவாகின்றது.

வரலாறுகள் வழிகாட்டுகின்றன. நேற்றைய புரட்சிகர நிகழ்வுகள் எப்படி இன்று வரலாறாகி ஏனைய நாடுகளின் நாளைய புரட்சிகர வரலாற்றுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளனவோ அதே போல இன்று தமிழ் ஈழத்தின் பல பாகங்களிலும் நிகழும் சம்பவங்களின் படிப்பினைகள் நாளை உலகின் பல பாகங்களிலும் உருவாகும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நாளை வழி காட்டும் என்பதில் ஐயமில்லை. ●

அருண் பிரசாத்



கவிதை

## ஆடடா களத்தே...!

பத்துத் தடவை பாடைவராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா
செத்து மடிதல் ஒரே ஒரு முறைதான்
சிரித்துக் கொண்டே செருக்களம்வாடா!
முத்தமிழோடு மோதினார் பகைவர்
முடங்கிக் கிடப்பதென்ன நீதி
குத்தும் கணைகள் குண்டுகள் வரட்டும்
குருதிபெய்யடா! கொட்டு முரசே!!
ஆற்றல் உடையாய்! ஆண்மைத் தமிழனே
அட நீ என்னடா அடங்கி நின்றனை
சோற்றுப் பானையும் நாமும் ஒன்றோ?
சும்மா வயிறு நிரப்பவோ வந்தோம்?
மாற்று வீரன் மருளத் தமிழன்
மானப்போர் செய்திட மாட்டானோ?
நாற்றிசையும் நடுங்க எழடா
நடந்து போ செங்குருதி நடுவிலே!
அன்னைத் தமிழோ அழுது கிடந்தாள்!
அருந்தமிழ் நாடோ அழுந்திக்கிடந்தது
முன்னைச் சேர சோழ பாண்டியர்
மூச்சு முடிந்து போச்சோ தமிழா?
உன்னைத் தமிழனாகப் பெற்றாள்
ஊட்டி வளர்த்த முலைப்பால் எங்கடா?
தென்னைக் குலைகள் என்னப் பகைவர்
சென்னிதிருகடா! செருவில் எழுகவே.
விடுதலை என்ன மலிவு விலையோ?
வீதிக்கடையில் விற்பனைக்குண்டோ?
புடலங்காயோ விடுதலை? போடா!
போர்க்களம் ஆடப்போ! அதுகிடைக்கும்!
கொடு விலையாகக் குருதியும் ஆவியும்
கொடடா உன் தலை! கொள்க விடுதலை!
அட நாம் மானத்தமிழர் அல்லவோ!
ஆளப் பிறந்தோம்... ஆடடா களத்தே...!

- காசி ஆனந்தன்

## போராட்ட காலத்தில்

தமிழர்களின் போராட்டத்தை மழுங்கடிக்க சிங்கள பேரினவாத சக்தியான சிறீலங்கா அரசானது தமிழர்களுக்கு பல இன்னல்களை ஆரம்பத்தில் இருந்தே கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த வகையிலே 1987 களில் உக்கிரமான போராட்ட காலத்தில் சிறீலங்கா அரசு தமிழர் வாழும் பகுதியெங்கும் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்து அதன் மூலம் தமிழ் மக்கள் போராளிகள் மீது வெறுப்படைவார்கள், அப்பேற்பட்ட சூழ்நிலைகளில் தமிழர்களின் போராட்டம் நசுக்குவதற்கு ஏற்ற தருணமாக அமையும் என்று சிங்கள அரசு கங்கணம் கட்டி செயல் பட்டு வந்தது.

ஆனால்இன்றையபோராட்ட சூழ் நிலையிலே சிங்களஅரசானது தமிழீழமெங்கும்மற்றைய நாடுகளுக்கு தெரியாத வகையிலே பொருளாதார தடைகளை தமிழர் பகுதி யெங்கும் நடைமுறைப்படுத்திவருகின்ற அதே வேளையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் போதியளவு உணவு, எரிபொருள் உண்டு என்றும் அவற்றை தாம் அனுப்பியும்வருவதாக உலகிற்கு காட்டி வருகின்றது

சிறீலங்கா அரசின் இந்த பொருளாதார தடைகளை தமிழீழமெங்கும் ஏற்படுத்தி தமிழர்களின் பொருளாதார வளர்ச்சியை கட்டுப்படுத்தி அதன் மூலம் தமிழர்களை அடக்கி ஒடுக்க முற்படுகின்றது. இந்த பொருளாதார தடைகளின் வெளிப்பாடுகளின் ஓர் அம்சமாக தமிழர்களின் நாளாந்தப் பயன்பாட்டிலுள்ள எரிபொருள்களுக்கு கடுமையான தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கையை சிரமப்படுத்துவது மட்டுமன்றி போக்குவரத்து வசதிகளைச் சீர்குலைப்பதும் கைத்தொழில் பேட்டைகளில் வேலையின்மையை உண்டு பண்ணி வறுமை, பட்டினியையும், வாழ்க்கை செலவுகளையும் அதிகரிக்க செய்து தமிழ் மக்களின் பொருளாதார வசதிகளை மழுங்கடிக்க செய்ய சிங்கள அரசு தீவிர முயற்சி செய்து வருகின்றது.

சிங்கள அரசினால் தமிழர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட பொருளாதார, எரிபொருள் தடைகளில் இருந்து நாம் மீட்சி பெற வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். பெற்றோலியப் பொருட்கள் மக்களின் அன்றாட பாவனைக்கு வருவதற்கு முன்னர் எமது முன்னோர் பலவித எரிபொருட்களை தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தியுள்ளார்கள் இவையாவும் எமது பிரதேசத்தில் இருந்து பெறப்பட்டவைகளே. இந்த வகையிலே இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வரும் எரிபொருளுக்கு இப்பொழுது தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதனால் பொருளாதாரம் சின்னாபின்னமடையும் என்று நாம் பீதி கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆகவே தற்பொழுது ஏற்பட்டுள்ள இப்பிரச்சினைக்கு நாம் முகம் கொடுத்து அத்தடைகளை உடைத்தெறிய வேண்டிய கடமை நம்முடைய பொறுப்பான செயலில்தங்கியுள்ளது. எனவேதற்போது இத்தற்கு தகுந்த அணுகுமுறையை கடைப்பிடித்து செயல்படுவது தான் இப்பிரச்சினைக்கான தீர்வாகும்.

# நெருக்கடி காலத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க வழியென்ன?

அரசு ஏற்படுத்தியுள்ள தடைக்கு எதிராக எரிபொருளின் பாவனையில் சிக்கனத்தை மேற்கொள்வதுடன் மாற்று எரி பொருள் சக்தி வளங்களைக் கண்டறிதல் அவசியமானதாகும். அடுத்து பாரம் பரியமாக எமது மூதாதையர் பயன்படுத்தி வந்த எமது சூழலிலுள்ள எரிபொருட்களை மீள விருத்தி செய்து பயன்படுத்துதல் வேண்டும். காலங்காலமாக பெற்றோலிய எரிபொருட்களைப் பயன்படுத்திய பின்பு எமது சூழலிலுள்ள பொருட்களை எரி பொருளாகப் பயன்படுத்தும் பொழுது ஏற்படும் வசதியீனங்களை எந்த ஒரு இனமும் தனது விடுதலைக் காகப் போராடும் காலகட்டத்தில் சகித்துக் கொள்வதும் அவசியமாகின்றது.

### போக்குவரத்து கட்டுப்பாடு

அத்தோடு எமக்கு தடைகளின் மத்தியிலும் எரிபொருட்கள் சட்டவிரோதமாக கிடைக்கின்றன. இவற்றை கிடைக்கும் பொழுது நாம் சேகரித்து வைத்துக் கொள்வதோடு இப் பெற்றோலியப் பொருட்களின் விரயத்தையும் நாம் தடுக்க வேண்டும். இப்படியான கால கட்டத்திலே எரிபொருட்களை மிச்சப்படுத்துவதற்கு மட்டுப் படுத்தப்பட்ட போக்குவரத்து சேவைகளை மேற்கொள்ள வேண்டும்.

### விறகுத் தட்டுப்பாடு

பெற்றோலியப் பொருட்களின் தட்டுப்பாடுகள் மட்டுமன்றி விறகுத் தட்டுப்பாடு பற்றியும் நாம் இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகும்வீட்டுப்பாவனைக்கு விறகுகளை மட்டும் பாவிப்பது இன்றைய கால கட்டத்தில் நெருக்கடியான நிலையே. மக்களின் பரம்பலின் தொகை அதிகரிப்பால் விறகுக்காக மரங்கள் கூடுதலாக வெட்டப்படுவதால் இதன் நிலையிலும் நெருக்கடி காணப்படலாம். எனவே இதற்குமாற்றீடான பொருட்களானமரத்தூள், உமி போன்றவற்றை வீடுகளில்சமையலுக்குப் பயன்படுத்தலாம். இவற்றை விட எமது பிரதேசத்தில் எடுக்கப்படும் இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், தேங்காயெண்ணெய் போன்றவற்றை விளக்கேற்றும் தேவைகளுக்கு பயன் படுத்தலாம்.

### நீர் இறைப்பு

பயிர்ச் செய்கைக்கான நீரிறைப்பு இங்கு மிகவும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். யாழ்குடாநாட்டில் பல பயிர்ச் செய்கையாளர்கள் மண்ணெண்ணெய், நீர்மின் சக்தியையும் பிரதானமாகக்கொண்டு நீர் இறைக்கின்றார்கள் கடந்த சில வருடங்களாக சில குறித்த பகுதிகளில் இம்முறையை பயன்படுத்தி கடும் சூரிய கதிர்வீச்சு நேரத்திலும் அதிக அளவு நீரை கிணறுகளில் இருந்து வெளியேற்றியமையினால் இதில் பெருமளவு நீர் பயிர்களுக்கு பயன்படாது ஆவியாக்கப்பட்டிருந்தமை பல ஆய்வுகள் மூலம் தெளிவு படுத்தியுள்ளதுடன் ஒரு சில விவசாயிகளின் இத்தகைய செயல் காரணமாக நன்னீர்ப் பீடத்தினுள் உவர் நீர் ஊடுருவி பல கிணறுகள் உவர் நீர்க்கிணறுகளாக மாறி வருவது அவதானிக்கத்தக்கது. எனவே விவசாயிகள் எமது முன்னோர் பயன்படுத்தி நீரை வெளியேற்றும் முறைகளாகிய துலா, பட்டை, சூத்திர முறைகளை பயன் படுத்துவதன் மூலம் எரிபொருட்களின் பங்களிப்பை கட்டுப்படுத்தலாம்.

### பாரம்பரிய வாகனங்கள்

போக்குவரத்து துறையில் இக்கால கட்டத்தில் பெற்றோலியப் பொருட்களைப் பயன்படுத்தாத சாதனங்களான சைக்கிள்கள், மாட்டு வண்டிகள், தள்ளுவண்டிகள், சைக்கிள் ரிக்ஷாக்கள் என்பவற்றை பயன்படுத்துவதன் மூலம் எரிபொருள் தடையை நிவர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதோடு எமது பொருளாதார வீழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியும்.

இத் தடைக்கு எதிராக புதிய சக்திப் பொருட்களைக் கண்டு பிடித்து பயன்படுத்த வேண்டும். இவைதற் சமய தீர்வாக நெருக்கடியை குறைத்துக் கொள்ள உதவலாம். காற்றாடி வலு, எரிவாயுஉற்பத்தி, சூரிய கதிர் அடுப்புகள், பற்றறிகள் இவற்றை ஆராச்சிகள் மூலம் எமது நாட்டு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பத் தொழில் நுட்பவியலாளர்கள் அதிகளவு முயற்சி எடுத்து செயற் படுத்துதல் வேண்டும். இவற்றின் மூலமாக நாம் எமது பகுதிகளிலேயே பொருட்களை உற்பத்தி செய்துகொள்ளவாய்ப்பு ஏற்படலாம்.

இன்றைய நிலையில் எமது பிரதேசமும் உலகின் ஏனைய பல நாடுகளும் பெற்றோலிய பொருட்களின் தேவையை குறைக்க திண்டாடுகின்றன. எனினும் உலக நாடுகள் பலவற்றிலும் தற்பொழுது பெற்றோலியப் பொருட்களுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தத் தக்க பொருட்களுக்கான ஆராய்ச்சி தொடர்கின்றன. எனவே நாமும் இந் நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவோம். ●

---

# மக்களும் போராளிகளாய் மாறியதால் வெற்றி......!

இன ஒடுக்கல் - உரிமை மறுப்பு- இழப்பை ஈடு செய்யப் புரட்சி- ஆயுதம் ஏந்தல்- மக்கள் அழிவு- என்பன ஈழத்தில் வாழும் தமிழர்களாகிய எமக்கு மட்டும் நடைபெறும் இன்னல் அல்ல.

இன்று உலகில் பெரும்பான்மை நாடுகளில் இழந்த உரிமையை மீட்டெடுக்க யுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அவ்யுத்தங்களில் போராளிகள் மட்டும் யுத்தம் செய்யவில்லை. மக்களும் சேர்ந்து போராடுகின்றார்கள். ஆயுதம் ஏந்தியும், போராளிகட்கு பலவாறான உதவிகளை அளித்தும் போராட்டத்தில் தம் பங்கை மக்கள் அளிக்கின்றனர்.

இத்தகைய உலக போராட்டங்களில் மக்களின் பங்களிப்பையே இங்கு தரவிருக்கிறேன்.

### வியட்னாம் யுத்தம்

வியட்னாமில் பெரும் வல்லரசான அமெரிக்கா உள்ளூர் கிளர்ச்சியை தூண்டி விட்டு அதில் தன்னை ஈடுபடுத்தி பெரும் அழிவுகளை நிகழ்த்தியது. ஒரு பெரும் வல்லரசை அங்கு போராளிகள் சமாளித்தனர். எவ்வித உணர்வும் அற்று பொம்மர்களில் பாரிய சேதம் தரும் குண்டுகளை வீசியது. சிறுவரோ, பெரியவரோ யாரையும் நோக்காது நேபாம்களை வீசி நாட்டையே பற்றி எரிய வைத்தது. ஆனாலும் போராளிகள் சமாளித்தனர் மக்களின் பாரிய உதவியுடன்.

ஒரு இடத்தில் தாக்குதல் நடைபெற்றால் அவ்வேளை மக்கள் தம்மைக் காத்துக் கொள்ள பதுங்கு குழிகளில் பதுங்குவார்கள்.

தாக்குதல் முடிந்ததும் மக்கள் நிற்கும் இடம் தாக்குதல் இடம் பெற்ற இடத்தில், வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல. அங்கு விழுந்த ஷெல்த் துண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள், ஆகியவற்றைப் பொறுக்குவதற்காகவே, அவற்றை எடுத்துச் சேர்த்து போராளிகளிடம் அளிப்பார்கள் அவர்கள் அதனை உருக்கி மீள ஆயுதங்கள் செய்து தாக்குதலுக்கு பயன் படுத்துவார்கள். இதனால் பொருளாதாரப் பிரச்சனை குறைகிறது. இந்த வேலையை போராளிகள் செய்யத் தொடங்கியிருப்பின் வியட்னாம் என்றோ நிர்மூலமாகியிருக்கும். மக்கள் ஒத்துழைத்தமையாலேயே போராட்டம் வலுவாக இருந்தது. மேலும் அங்கு போராளிகள் வேலை போராடுவதே. போராளிகட்கு தேவையான உணவுகளை தயாரித்தல், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல் போன்றவற்றை செய்தவர்கள் மக்களே, இதனால் போராளிகளின் வேலை போராடுவதாக இருந்தது.

இதனால் ஒரு பெரிய வல்லரசை மற்றைய நாடுகளின் துணையின்றி எதிர்க்கக் கூடியதாக இருந்தது. பெரும் விமானங்களை வீழ்த்தி வெற்றி கொள்ளக் கூடியதாக இருந்தது.

இங்கு மக்கள் தனித்து நிற்கவில்லை போராளிகளோடு போராளிகளாகவே நின்றனர். எந்தநேரமும் தோளில் குடும்பத்திற்கொரு முதலுதவிப் பொருட்கள் இருக்கும். றொட்டி போன்ற உலர் உணவுப் பொருட்கள் இருக்கும்.

திடீர் என்று எவ்வித முன்னறிவிப்புமற்ற தாக்குதல் ஒவ்வொரு வினாடியும் எதிர் நோக்கியவாறு மக்கள் இருப்பார்கள்.

அத்தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவிகளை அளித்துக் காப்பார்கள் வீதிகள் எங்கும் சுத்தமாக பராமரிக்கப் பட்டிருக்கும். அவசர வேளைகளில் மக்கள் படுத்துத் தப்புவதற்காக, போராளிகள் வசதியாகத் தாக்குவதற்காக.

உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்காக உள்ளூர் உற்பத்தி வெகுவாகக் காக்கப் பட்டிருந்தது' எந்த உதவியையும் எதிர்பாராது தம்மைக் காத்துக் கொண்டார்கள் வியட்னாமிய மக்கள்.

வயல்களில் வேலை செய்வார்கள் பெண்கள். முதுகில் துப்பாக்கியோடு, இவர்கள் போராளிகள் அல்லர். மக்களே. தம்மைத் தாமே காத்துக் கொள்ள துப்பாக்கியை வைத்திருந்தார்கள். திடீரென விமானம் வரும்... தாக்கும் இங்கு அவர்களை விரட்ட போராளிகள் வரவில்லை. மக்களே அதிலும் பெண்களே முதுகில் தொங்கும் துப்பாக்கியால் சுட்டு விரட்டினார்கள்.

கிராமம் கிராமமாக இளைஞர்கள் பயிற்சி பெற்றிருந்தார்கள். தங்கள் கிராமங்களை தாங்களே காத்து நின்றார்கள். அவர்களது விடுதலை இயக்கம் போராளிகளை இழந்து நிற்கும் வேளையில் அந்த இடத்தை அந்த பயிற்சி பெற்ற இளைஞர்கள் நிரப்பினார்கள். ஒரு பெரும் வல்லரசை சமாளித்தார்கள். அதிலும் ஈவிரக்கமற்று படுகொலை புரியும் அணுகுண்டையே வீசி அழிக்கத்தயங்காத பெரும் வல்லரசான அமெரிக்காவை சமாளித்தார்கள்.

போராளிகள் தனித்து நின்று இதனைச் சாதிக்கவில்லை. தனித்து நின்றிருந்தாலும் சாதிக்க முடியாதிருந்திருக்கும். மக்களும் போராளிகளாக மாறினர். இதனால் தான் அவர்களால் முடிந்தது.

அவர்களால் மட்டுமல்ல மக்களின் ஒத்துழைப்பு கலந்த எந்த போராட்டமும் வெற்றியை ஈட்டும். மக்கள் மக்களாய் நில்லாமல் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும்... வெற்றி நிச்சயம். ●

---

## குட்டிக்கதை

# கடமை

அயக்கிரீவன்

தற்பாதுகாப்பு பயிற்சி முடித்து கொண்டு மைதானத்தை விட்டு அவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். பல்வேறு வயதினர் வேறுபட்ட தோற்றம் கொண்டவர்கள்.

தெருவில் நின்ற சில இளைஞர்கள் அவர்களை வேடிக்கை பார்த்தார்கள். கைகளில் அநியாய விலைக்கு வாங்கிய சிகரெட்டுக்கள் புகைந்து கொண்டிருந்தன. கண்களில் சிவப்பு.

''எட ஒரு 'நைன்டி'யும் ரெயினிங் எடுக்குது மச்சான்'' என்றான் அவர்களில் ஒருவன்.

அவனால் நைன்டி என்று சுட்டிக் காட்டப் பட்டவருக்கு அந்தவார்த்தைகள் காதில் விழுந்திருக்க வேண்டும் அவர் அந்த இளைஞர்களை நோக்கி நடந்து வந்தார். நரைத்த தலையுடன் முதுமை களை கட்டியிருந்தது.

''தம்பியவை எனக்கு இன்னும் தொண்ணூறு ஆகேல்லை இப்பத்தான் அறுபது வயது எனக்கு உங்களைப் போல ஒரு பெடியன் இருக்கிறான் அவனும் உங்களைப் போலதான் றோட்டு அளக்கிறான் என்ன செய்ய குடும்பத்தில் கடைசி ஒருத்தராவது போராட்டத்தில் சேர வேண்டும் எண்டதுக்காக வெளிக்கிட்டு இருக்கிறன் கடைசி என்னைப் பார்த்திட்டாவது அவன் திருந்தட்டும் என்றார். உங்களைப் போல ஆக்களுக்கு இதுகள் பகிடியாகத்தான் இருக்கும்.

# போர்க்காலப்பூக்கள்

சசிவர்ணன் எழுதும் கதை வரிசை...

நல்லூரடிதான் இப்போது சில நாட்களாக வெளியூர் பஸ்நிலையமாக மாறியிருக்கிறது. சூழல்கள்தாம் எல்லாவற்றையும் நிர்ணயிக்கின்றன என்பது எவ்வளவு உண்மை..,

திருக்கோணமலை, வவுனியா என்றெல்லாமிருந்து சனங்கள் அடிக்கடி வந்து இறங்குகிறார்கள். அகதிகள்...ஒவ்வொருவரும் எவ்வளவு எவ்வளவு கஷ்டப்பட்டு வந்து சேர்ந்தார்களோ...அவனையறியாமலே ஒரு பெருமூச்சு வந்தது...

இதோ, முன்னால் ஒரு கூட்டம் போய்க் கொண்டிருக்கிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்கள்... ஏதேதோ எடுக்க முடிந்தவற்றைத் தூக்கிக் கொண்டு, களைத்துக் காய்ந்து...

அவன் சைக்கிள் அவர்களை நெருங்கிய போது அக்குழுவில் எல்லோர்க்கும் பின்னால் போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணும் ஒரு சிறுவனுமே முதலிற் கண்ணிற்பட்டார்கள். அவள் ஒக்களையில் இன்னுமொரு கைக்குழந்தை. வலது கையில் ஒரு சூட்கேஸ்; பிடித்துக் கொண்டிருந்த மாதிரியில் வலு பாரமாக இருக்கும் போலிருந்தது. அடிக்கடி நின்று நின்று பார்த்து அழைத்துப் போய்க் கொண்டிருந்த அந்தத் தாய்க்குப் பின்னால் ஓடிக் கொண்டிருந்த இந்தக் குழந்தைக்குக் கூட, தூக்கிக் கொண்டு போகப்படவேண்டிய பருவந்தான். ஆனால், அவள்தான் என்ன செய்ய முடியும்? கூட வேறுயாருமில்லையா?

அவர்களைத் தாண்டும் சமயம், அவள் மீண்டும் திரும்பிச் சொன்னது தெளிவாய்க் கேட்டது; 'இன்னுங் கொஞ்சத் தூரந்தான்...அதுக்குப் பிறகு பஸ்ஸிலை போகலாம், வாங்கோ...'

பஸ்ஸிலையா?...'

என்ற மழலைக்குரல், அவனை என்னவோசெய்தது. இந்த முன்னுக்குப் போகிற இருபது, இருபத்தைந்து பேரில் இவர்கள் ஆட்கள் எவருமில்லையா?

இரண்டு எட்டு மிதித்த போது அந்த யோசனை வந்தது!

அந்தக் குழந்தையை நானே சைக்கிளில் கூட்டிக் கொண்டு போய் விட்டாலென்ன? கூடவே ஒரு தயக்கம் - எப்படிக் கேட்பது? யாராவது வித்தியாசமாக நினைத்தால்? தான் ஒரு வயதாளியாக இருந்தால் பரவாயில்லை...

அப்படி இவர்களோடு வேறொருவரும் வந்திருக்க மாட்டார்களா? இந்த முன்னுக்குப் போகிற இத்தனை பேரில்? அந்தா, அந்தப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு எட்டி எட்டி நடக்கிற ஆட்களில் அந்தப் பிள்ளையின் தகப்பனும் ஒருவனாக இருக்காதா? ஒரு ஆளைக் கேட்டான்:

''அண்ணை, துலையாலையே வாறியள்?...'

'மலையிலிருந்து...'

அந்த ஆளையே கூடக் கட்டிருக்கலாம்...நான் உங்களுக்கு எதையாவது சுமந்து கொண்டு வந்து பஸ் நிற்குமிடத்தில் தரட்டுமா என்று. ஆனால், இந்தக் கோலத்தில் எப்படி?

அவர்களைக் கடந்தாயிற்று; பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். கே.கே.எஸ். வீதிச் சந்திக்கு நடக்கிறவர்களாக இருக்கலாம், அநேகமாக...இன்னும் நியாயமான தூரம்...

தடுதாலியில் அவன் வேகம் இன்னுங் குறைந்தது. எதிரே போன ஒன்றிரண்டு பேர் தலையசைத்தபோது தன்னையறியாமலே, எவரென்றுகூட அறியாமல், தலையாட்டி வந்தான்...

ஹெலியா?...அந்த இரைச்சல்?... லான்ட் மாஸ்ரர் அல்ல.

அந்தா! . கோட்டைப் பக்கம் போகிறதோ?

தெருவில் பரபரப்பு...

இன்னுமொரு சத்தம் பின்னால்...இரண்டா?

என்ன இந்தத் திடீர்த்தோற்றம், இந்த நேரத்தில்? என்ன நடக்கப் போகின்றது?

சத்தங்கள் பலமாய் இருந்தன. சனங்கள் ஒதுங்கத் தொடங்கினார்கள். அவசரப்பட்டு ஓடுகிறவர்கள்...மரங்களடியில் நின்று அண்ணாந்து பார்க்கிறவர்கள்...

அவனையறியாமலே ஒரு பரபரப்புக் கிளர்ந்தது. என்ன செய்ய? ஒதுங்கவா? ஓடவா? பின்னால் வந்த சனங்கள் என்ன செய்வார்கள்? இவ்வளவு கஷ்டப்பட்டு இந்தளவு தூரம் வந்த பிறகும் இப்படியா? அந்தப் பெண்ணும் பிள்ளைகளும்... திரும்பலாம்.

## சூழல்



''கண்ணா...'' தெருக்கரைக் கடையொன்றின் முகப்பிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள்! பாலா!

''உனக்கென்ன, பைத்தியமா? எங்கை போறாய்?... சுடப்போறான்கள் போலகிடக்கு... இதிலை 'கீழை வந்துநில்'– கடையின் கொங்கிறீற் முகப்பைக் காட்டினான். இன்னும் சிலர், ஒதுங்கி, அருகில்.

பாலா சொல்லி வாய்மூட முன், சட சடத்துக்கேட்டது. சைக்கிளை மரத்தடியில் சார்த்திவிட்டு பாலாவடிக்கு ஓடினான். இயந்திரங்களும், வேட்டொலியும்... தெரு வெளித்துப் போயிற்று. எதிர் வீட்டுத் தாழ்வாரத்திலும் ஆட்கள்...

பாலா கேட்டான்.

''எங்கை போட்டு வாறாய்? என்னயோசினை?...''

அவன் சொன்னான்.

''ஆருக்கு ஆர் உதவிசெய்ய முடியும், கண்ணா?... எங்கையாவது ஒதுங்கியிருக்குங்கள், கவலைப்படாதை ஆண்டவனிருக்கிறான்...''

பாலா சொன்னது உபசாரத்துக்கா, உண்மையாகவா என்று தெரியவில்லை.

கால் மணித்தியாலத்துக்குக் கூடவே ஆகியிருக்கும்...

ஏதோ வந்தவேலையை முடித்ததுபோல், வடக்குப் பார்த்துத் திரும்பி, விறுவிறென ஹெலிகள்...

கண்ணால் மறைந்த பின்னரே தெரு உயிர் பெற்றது.

பாலாவிடம் சொல்லிக் கொண்டு திரும்பினான். வந்த வழியே. அவர்கள் எங்கே? தெருவில் இப்போது கூடுகிற சனங்களிடையே தேடியும்... முதலில் காண நேர்ந்த இடம் மட்டும் போயும்... அவர்களில் எவருமே இல்லை.

பலாலி வீதியால் திரும்பியிருக்கலாமென்று பட்டது.



## காவியக் கவிதையானோர்

அந்நியர் கால் பிடித்து
அவர்களுக் கடிமையாகி...
இந் நில மாந்தர் தம்மை
இன்னலுக் காக்கி அன்று
பொன் புகழ் பதவி ஆசை
போதையில் மயங்கி நாளும்
அன்னை மண் மீதும் அங்கு
ஆகுதியாக ரத்தம்...
சிந்திய வீரர் மீதும்...
விடுதலைப் போரின் மீதும்...
கறையினை படியவைத்தோர்
கதையினை முடித்துவைத்து
காவிய மாகி னீர்கள்...
கவிதையாய் வாழ்கிறீர்கள்

வீரரே...
நீங்கள் வீழ்ந்த
மண்ணிலே விதைகளானீர்...
விடுதலை என்ற வேள்வி
தீ வளர்த்துயர்ந்து நின்றீர்...
தீயவர் தமை அழிக்கும்
தீயுமாய் ஒளிர்ந்து நின்றீர்...
தாயகதாகம் உங்கள்
நெஞ்சிலே தணியும் வேளை
மீளவும் எழுக... எம்மை...
ஆளவும் வருக... வருக...

★ ★ ★

*13 - 7 - 1989* அன்று தமிழினத் [illegible]ரோகிகளை அழித்து சிறீல[illegible]காவின் தலைநகரான கொழு[illegible]ம்பில் வீரமரணத்தைத் தழு[illegible]ய மூவருக்கும் எமது வீர அஞ்சலிகள்.




*01-02-90*

இந்திய இராணுவத்தில் இருக்கும் சிப்பாய்களுக்கும் கூட திமிர் இருக்கிறது. இன்று காந்தன் என்ற பையன் படித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சிப்பாய் வந்து அடித்து விட்டான். சிறைச்சாலைகளை கல்விச்சாலைகளாக நாம்மாற்றியிருப்பதுகுறித்துஇவர்களுக்குப் பொறாமை. எந்த நோக்கத்துக்காக, எம்மைச் சிறையில் அடைத்தார்களோ அந்த நோக்கத்துக்கு மாறாக சிறையில் கழிக்கும் காலத்தை பிரயோசனப்படுத்துகிறோமே என்பது தான் இவர்களது ஆத்திரத்துக்குக் காரணம். உலகில் எந்த ஜீவராசியும் தான் பாதிக்கப் படும் போது தன்னாலான சிறு எதிர்ப்பையாவது காட்டுவது இயற்கை தானே. அந்த வகையில் அடித்த ஆமியின் தடியைப் பறித்து எறிந்து விட்டு கையை ஓங்கினான் காந்தன். அறைக்குள்ளே காந்தனும் அறைக்கு வெளியே ஆமியும் நிற்கையிலேயே இந்தச் சம்பவம் நடந்தது. காந்தனை 'வெளியே வா' என்று உத்தரவிட்டான் ஆமி முடிந்தால் உள்ளே வா'! என்றான் காந்தன். உள்ளே வருவதற்குப் பயம். தனியே உள்ளே வந்தால் உருப்படியாக வெளியே போக முடியாது என்ற பயத்தில் வெளியே நின்று வீரம் பேசினான். ஆமி எம்மை அழைத்து காந்தனை அனுப்பச் சொன்னான். ஏக குரலில் 'அனுப்ப முடியாது. முடிந்தால் உள்ளே வரலாம்!' என்றோம். நீங்களெல்லாம் கைதிகள். நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். இந்தப் பையனுக்கு ஏதாவது தண்டனை கொடுங்கள். அதை நான் என் கண்ணால் பார்க்க வேண்டும்' என்றான் ஆமி. 'நீங்கள் சொல்லி நாங்கள் தண்டனை கொடுக்க முடியாது. இது சம்பந்தமாக நீங்கள் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளலாம்' என்றோம் நாம். ஆமி சொல்வதற்காக எமது பையனுக்குத் தண்டனை கொடுக்க முடியுமா? எங்களை என்ன ஈ.பி.ஆர். எல்.எவ். தோழர்கள்' என நினைத்துக் கொண்டார்களா இவர்கள்? இதன் விளைவுகள் எதையும் அனுபவிப்பதெனத் தீர்மானித்தோம்.

இதே போலத்தான் ஒரு நாள் 'G' புளொக்கில் குளிக்கச் செல்லும் ஒவ்வொருவரும் தனக்கு முன்னால் நின்று பத்து தோப்புக்கரணம் போடவேண்டுமென்றும், அப்படிப் போடுபவர்களைத் தான் குளிக்க அனுமதிக்க முடியும் என்றும் ஒரு சிப்பாய் கூறினான். கைதிகளைத் துன்புறுத்திப் பார்ப்பதே இவர்களுக்குப் பிரியமான விளையாட்டு. அங்கே இவர்களது சொந்த நாட்டில் ஒரு பகுதியை சீனாக்காரன் பிடித்து வைத்திருக்கிறான். அதை மீட்கத்துப்பில்லை. இங்கே வந்து கைதிகளை இம்சித்து இன்பம் காணவிழைகிறார்கள் இவர்கள். 'தோப்புக் கரணம் போட்டுத்தான் குளிக்க வேண்டுமென்றால், எமக்குக் குளிப்பே தேவையில்லை. ஒருவரும் தோப்புக்கரணம் போட நினைக்க வேண்டாம்'' என்று அந்த புளொக்கில் இருந்த கிளிநொச்சி இரத்தினம் அண்ணர் பையன்களிடம் கூறினார். அதைத் தொடர்ந்து குளிக்காமல் உள்ளே சென்றனர் பையன்கள். தனது உத்தரவுக்குக் கீழ்ப்பணியாத இக்கைதிகள் இரத்தினம் அண்ணரின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பது குறித்து அங்கிருந்த ஆமிகளுக்கு ஆத்திரம். எனவே ஒரு வாரம் கழிவு தண்ணீர் அள்ளி ஊற்றும்படி அவருக்கு உத்தரவிட்டனர். ''நாங்கள் குளிக்கும் தண்ணீரே இந்தக் கழிவு குட்டையில் தேங்குவன. எனவே எமது வேலையை நாங்களே செய்வதில் தவறில்லை. எப்படியோ இதை எமது பையன்களில் ஒருவர்தான் ஊற்றப்போகிறான். ஆனாலும் தண்டனை என்று இதைச் சொன்னால் நான்செய்யத்தயாரில்லை என்று தொடர்ந்து ஊற்ற இரத்தினம் அண்ணர் மறுத்து விட்டார்.

அனைவருக்கும்பொதுவான விடயங்களுக்காக கதைக்கும் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது. ஒவ்வொரு கைதியையும் ஆட்டிப்படைக்க வேண்டும் என்பதே இவர்கள் ஆசை. கைதிகளுக்குச் சரியான மருத்துவ வசதியில்லை. சிறிய பிரச்சினைகளுக்கெல்லாம் கடுமையான தண்டனை கொடுக்கிறீர்கள். இந்த நிலைமை மாறவேண்டும் என்று ஒரு முறை மகஜர் ஒன்றைத் தயாரித்து அனைவரிடமும் கையெழுத்து வாங்கி அனுப்பினார் இரத்தினம் அண்ணர். அதன் பிறகும் மருத்துவ வசதிகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அற்ப காரணங்களுக்காக மாட்டை ஏற்றி அடிப்பதும் தொடர்ந்தது. எனவேநாங்கள் கொடுத்த மகஜர் தொடர்பாக தங்கள் பதில் என்ன? என்று கேட்டு இன்னொரு மகஜர் தயாரித்து கையெழுத்து வாங்கி அனுப்பினார் அவர். உடனே அந்த மகஜரில் கையெழுத்திட்டவர்களில் முதல் இரண்டு பேரைப் பிடித்து இருட்டறையில் போடுமாறும், மூன்று நாட்களுக்குச் சாப்பாடு, தண்ணீர் எதுவும் கொடுக்கக் கூடாது என்றும் மேஜர் சவான் உத்தரவிட்டார். அதன்படி இரத்தினம் அண்ணரும், அரசலிங்கம் அண்ணரும் இருட்டறைக்கு அனுப்பப்பட்டனர். மூன்று நாட்களும் சாப்பாடு இல்லை. ஆமிக்குத் தெரியாமல் சாப்பாடு கொடுக்க முனைந்தனர் இருட்டறையைக் கொண்டிருந்த 'B' புளொக் பையன்கள். சாப்பிட்டால் மலம் கழிக்க வேண்டிய தேவை ஏற்படும். அப்படியான நிலை ஏற்பட்டால் இவர்களுக்குச் சாப்பாடு கொடுத்ததற்காக அந்த புளொக்கிலுள்ளஅனைவருமே தண்டனைக்குள்ளாக நேரிடும் என்றகாரணத்தால் பையன்களின் கோரிக்கையை அன்புடன் மறுத்தனர் அவ்விருவரும். சாப்பாடு இல்லாமலே மூன்று நாட்களும் இருந்தனர்.

இதுதான் இந்திய இராணுவத்தினரின் ''அன்புவழி'' இந்த லட்சணத்தில் இந்தமுகாமுக்கு புனர் வாழ்வு முகாம் என்று பெயர் வைத்திருக்கின்றனர் இவர்கள். 'இந்த முகாமுக்கு ஏதாவது ஒரு பெயர் வைக்க வேண்டும் என்று நினைத்தே புனர்வாழ்வு முகாம் என்று பெயர் வைத்தோம்' என்று ஒரு நாள் ஒரு உயர் அதிகாரி சொன்னதுநினைவில் வந்தது.